**அரசு ஊழியர்**

ஜனவரி 2018

மலர் : 39 இதழ் : 1

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*

**சூடாக ஒரு கோப்பை சூப்**

## உயர்த்துவோம் நம் கொடியை!

நம்பியே மோசம் போனோம்
நஷ்டமுற்றுப் போனோம்!
சம்பள உயர்வு காணும்
சண்டைக்குத் தயாரானோம்!

ஒன்றுபட்டு போர்புரிந்தே
உயர்த்துவோம் நம் கொடியை!
இன்றுடன் தீருமடா – என் தோழனே
இம்சை முறைகளெல்லாம்!

- ஜீவா

# புத்தாண்டில் உறுதிமொழி ஏற்போம்

**2017**ஆம் ஆண்டை திரும்பிப் பார்க்கும் போது, நாட்டின் நிலைமையில் பிற்போக்கு சக்திகளின் ஆட்டங்கள் அதிகரித்துள்ளன என்பது தெரிய வருகிறது. நமது நாட்டின் ஏழை, எளிய மக்கள், உழைப்பாளி மக்கள், விவசாயிகள், அரசு ஊழியர்-ஆசிரியர்கள் என பலதரப்பினரும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக பொருளாதார ரீதியாக 2016ஆம் ஆண்டின் இறுதியில் ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு, சிறு தொழில் பிரிவினரையும், அதிலும் குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினரை கடுமையாக பாதித்தது. ஜிஎஸ்டி அமலாக்கம் மக்கள் மீது மேலும் சுமைகளை ஏற்றியிருப்பதுடன், வர்த்தகர்கள், உழைப்பாளி மக்களையும் கடுமையாக பாதித்திருக்கிறது.

விவசாய நெருக்கடியின் தாக்கமும் உணரப்பட்டிருக்கிறது. பல துறைகளிலும் வேலையிழப்பு நடந்துள்ளது. கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் கடுமையான பின்னடைவு ஏற்பட்டுள்ளது. மக்களின் வாழ்வாதாரங்களின் மீதும், தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்களின் ஜனநாயக உரிமைகளின் மீதும் கடும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளது. கலாச்சாரம், பண்பாடு, அரசியல், சமூகம் ஆகியவற்றின் அடிப்படை கட்டுமானங்கள் மீது வெறித்தனமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளன. தொழிற் சங்கங்களின் உரிமைகள் மீதும், தொழிலாளிகளின் உரிமைகள் மீதும் ஆட்சியாளர்களை தாண்டி, நீதிமன்றங்களின் தலையீடும் வரம்பு மீறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நமது ஜனநாயக உரிமைகளான போராட்டம், வேலை நிறுத்தம் ஆகியவற்றிற்கு எச்சரிக்கைகள் விடுவிக்கும்வண்ணம் ஆட்சியாளர்களின் நடவடிக்கையும், நீதிமன்றங்களின் வரம்பு மற்றும் நமது ஒன்றுபட்ட ஜாக்டோ-ஜியோ போராட்டம், செவிலியர் போராட்டங்கள், போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டங்களை கணிசமாக பார்க்க முடிந்தது. இதனை மீறி நமது வெற்றி நிலைநாட்டப்பட்டுள்ளது. ஊதிய மாற்றக் குழு அறிக்கை அதனை பறைசாற்றியுள்ளளது.

இவையனைத்தும் நமக்கு 2018ஆம் ஆண்டிற்

கான எச்சரிக்கைகள் என பார்க்கப்படுகிறது. நாட்டிலுள்ள நிலைமைகள், ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், ஜனநாயக உரிமைகளை பாதுகாப்ப தற்காகவும், விரிவான அளவில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், இன்னும் பிற பகுதி தொழிலாளர்கள், அத்துடன் மக்கள் ஒற்றுமையை கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்தியிருக்கிறது. உக்கிரமான முறையில் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்து கின்றன.

இன்னும் வஞ்சிக்கப்பட்டுள்ள சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலாளர், கிராம உதவி யாளர்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை. ஊதிய நிலுவைத் தொகை மறுக்கப்பட்டுள்ளது. புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட வில்லை. ஊதிய முரண்பாடுகள் களையப்பட வில்லை. குறைந்தபட்ச ஊதியமும், ஓய்வூதிய மும் மறுக்கப்பட்டுள்ளது. ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு கடுமையான தடை விதிக்கப்படுகிறது. பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டிய நீதிமன்றங்கள் வரம்பு மீறி உரிமைகளை தடுப்பதற்கு முயற்சித்து வருகிறது. இன்னும் ஏராளமான சவால்கள் காத்திருக்கிறது.

இத்தகைய தாக்குதலுக்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டங்கள் மற்றும் இயக்கங்களின் மூல மாகத் தான் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் வாழ்வில் ஓர் ஒளிமயமான காலத்தை உருவாக்க முடியும். உரிமைகளை பாதுகாக்க முடியும்.

எனவே, அரசு ஊழியர்களிடம் விரிவான ஒற்றுமையை வளர்ப்பது, ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பை தொடர்ந்து முன்னெடுப்பது, புதிய ஓய்வூதியம் எனும் அரக்கனை ஒழிப்பது, ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பது, மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பது உள்ளிட்ட நமக்கான ஸ்தாபன கடமைகளை நிறைவேற்று வதும்தான் 2018ஆம் ஆண்டு மேற்கொள்ள வேண்டிய உறுதிமொழியாக இருக்கும். ■

# வாசகர் கடிதம்

டிசம்பர் 2017 மாத இதழ் அட்டை படங்கள் போர் முரசு கொட்டுவதுபோல் இருந்தது. தோழர் சுகுமால் சென் மற்றும் தோழர் ஆர்.எம்.எஸ்-ம் உண்மையிலேயே புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட்டு இருக்கிறார்கள். நிச்சயம் விருட்சமாகும். செவிலியர்களுக்கான நீதிபதியின் தீர்ப்பு மனிதாபிமானமற்றது, அதற்கு முன்னாள் நீதிபதிகளின் கருத்தில் மனிதாபிமானம் உள்ளது. முதலில் நம்முடைய கோரிக்கைகளை தீர்த்து விடுவதாக சொன்ன அரசு நம்மையே தீர்க்கத்தான் முனைப்புடன் இருக்கிறார்கள். புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் பணிக்கு வந்தவர்களிடம் நமது போராட்டம்தான் காலிப் பணியிடங்களை நிரப்பியது என்பதை புரிய வைக்க வேண்டியது கடமை. அரசு என்பதே பூஜ்யமாகத்தான் உள்ளது. போராட்டங்கள் வழியே நமக்கான ராஜ்யத்தை அமைப்போம்.

- **சி. பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்.

சூடான ஒரு கோப்பை சூப் 'யார் நீ?' படித்ததும் சிந்திக்க வைத்தது. புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதாகக் கூறி நடக்கும் நம்பிக்கை துரோக நாடகங்கள் என்றாவது ஒரு நாள் முடிவுக்கு வரும். அது இன்றே வரும், இப்பொழுதே வரும். வாழ்க்கை ஒரு போராட் டம். அதை வென்றவர் வாழ்வுதான் தேரோட்டம். தமிழகத்தில் சமூக நீதிக்கு தோண்டப்படும் சவக்குழி. தமிழகத்தில் இருக்கும் எம்.எல்.ஏ.க் கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தமிழனுக்காக போராடவில்லை. அண்டை மாநில மனிதர்களுக்குத்தான் அரசு பணியை அடகு வைத்தது போல் இருக்கிறது. ஐந்து வருடம் அரசியல் பணி செய்யும் அரசியல்வாதிகளுக்கு மட்டும் ஓய்வூதியத் தொகை வேண்டுமாம். ஐம்பத்தெட்டு வயது வரை அயராது பணியாற்றும் அரசு ஊழியர் களுக்கு ஓய்வூதியம் இல்லையாம். இது சுதந்திர நாடா? அரசியல்வாதிகள் சுரண்டும் நாடா?

- **வேதனை விளிம்பில் இராம் கம்பர்**,தஞ்சாவூர்

சென்ற மாத இதழை படித்தேன். தலையங்கம் சிறப்பாக இருந்தது. இதை படித்தாவது வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளாதவர்கள் கூட நிச்சயம் பங்கேற்பார்கள். சங்க உணர்வை தூண்டும் வகையில் இருந்தது. ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் மீது பொய் வழக்கு போடப்பட் டுள்ளது குறித்து காவல் துறை தலைவருக்கு எழுதப்பட்ட கடிதத்தை படித்தேன். மனம் வேதனைப்பட்டது. செவிலியர்களுக்கு ஆதரவாக நாம் நடத்திய போராட்டம், டிசம்பர் 24 தந்தை பெரியாரின் நினைவு நாள் கட்டுரை, உங்களுக்குத் தெரியுமா? போன்ற கட்டுரைகள் மற்றும் தகவல்கள் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

# அருவி போல் விழு!
# தீ போல் எழு!!
# நதிபோல் ஓடிக்கொண்டேயிரு!!!

**2017**ம் ஆண்டைத் திரும்பிப் பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை புழுதி மண்டிய போராட்டக் களங்கள்தான் காணக் கிடக்கின்றன. அந்தப் புழுதி மண்டிய போராட்டக் களங்களுக்குள் மங்கிய வெளிச்சத்தில் நம் கண்களுக்குத் தெரியும் வைர வரிகள் இவைதான்:

வேலைகளை ஒத்திப் போடுபவன்
வெற்றிகளை ஒத்திப் போடுகிறான்.
விதைப்பதை ஒத்திப் போடுபவன்
விளைச்சலை ஒத்திப் போடுகிறான்
போராட்டங்களை ஒத்திப் போடுபவன்
உரிமைகளை ஒத்திப் போடுகிறான்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்ற உழைக்கும் வர்க்கத்தினருக்கான உரிமைகளை, அதிகாரம் என்ற கோடாறிகள் கொண்டு வெட்டி வீழ்த்தும் வேலைகளில் ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கத்தினரும் மூர்க்கத்தனமாக இறங்கி விட்டதன் விளைவுகள்தான் இவை. நாட்டில் நடக்கும் நாளொரு போராட்டத்திற்கும் பொழுதொரு ஆர்ப்பாட்டத்திற்குமான காரணங்கள். அதிகார வர்க்கத்தின் சொல்படி ஆட்சியாளர்கள் நடத்தும் அரசாங்கம் நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் அவதிக்கு உள்ளாக்கி நடுவீதியில் இறங்கி போராட வைத்துள்ளது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுத் துறைகளில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் பொறுத்து 2017ஆம் ஆண்டு இதுவரை வரலாற்றில் இல்லாத அளவுக்கு போராட்டங்களை, நெருக்கடிகளை சந்தித்த ஆண்டாக முடிந்திருக்கிறது. திருவண்ணாமலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12ஆவது மாநில மாநாட்டின் அறைகூவல் தீர்மானங்களோடு 2017ஆம் ஆண்டு தொடங்கியது. 2016ஆம் ஆண்டு ஜனவரி முதல் வழங்க வேண்டிய ஊதிய மாற்றம் 12 மாதங்களாகியும் கிடப்பில் போடப்பட்டு இருந்ததால் 2017ஆம் ஆண்டு ஆரம்பமே போராட்ட நெருப்பாக துவங்கியது.

ஊதிய மாற்றத்தை உடனடியாக ஏற்படுத்தி விடாமல் காலங்கடத்த வேண்டுமென்ற நோக்கத்துடனேயே அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் செயல்பட்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஊதிய மாற்றத்திற்கான போராட்ட அறிவிப்புகளைஅறிவித்து போராட்டக் களம் போனபிறகு அலுவலர் குழு அமைத்து அனைத்து சங்கங்களிலிருந்தும் கருத்துக்களையும், கோரிக்கை சாசனங்களையும் பெற்று அவற்றை பரிசீலிப்பதான தோற்றத்தை ஏற்படுத்தி தங்களால் இயன்ற அளவுக்கு காலம் கடத்தினர்.

மாநாட்டு அறைகூவல் தீர்மானத்தின்படி ஊதிய மாற்றம் ஏற்படுத்தும் வரை இடைக்கால நிவாரணம் கேட்டு தொடர்ந்து பல போராட்டங்கள் நடத்தியும் அரசு அதை உதாசீனப்படுத்தியது. அதனால் அடுத்தடுத்த நகர்வுகளுக்கு போராட்டங்கள் தள்ளப்பட்டன. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் என மேல்தட்டில் உள்ள அரசு அதிகாரிகள் தங்களுக்கான ஊதிய மாற்றத்தை 1.1.2016ஆம் தேதி முதல் ஒரு ரூபாய்கூட விட்டுவிடாமல் பெற்றுக் கொண்டு அடித்தட்டில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அடிப்படை ஊழியர்கள் போன்றோரின் ஊதிய மாற்றத்தினை மேற்கொள்ளாமல் இரகசியம் காத்து வந்தபோதே அவர்களின் எண்ணம் என்ன என்பதை சங்க நிர்வாகிகள் உணர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அறிவிப்பு விடுத்தனர்.

கிட்டத்தட்ட 20 மாத இடைவிடாத கோரிக்கைகள், முறையீடுகள், பிரதிநிதித்துவங்கள் என எதற்கும் மசியாத அரசின் பிடிவாதப் போக்கினால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வேறு வழியின்றி வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு உந்தப்பட்டனர். வேலை நிறுத்தப் போராட்டட்தின் போது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு பொதுநல வழக்கு தொடரப்பட்டு அதில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. அரசு ஊழியர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய, அரசியலமைப்பு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிமையை கொடுக்க மறுத்துவரும் அரசின் ஆணவப் போக்கை



கேள்வி எழுப்பாமல், குறைந்தபட்சம் ஊழியர்கள் தரப்பு கருத்தைக்கூட கேட்காமல், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை விதித்த இடைக்கால உத்தரவை அனைத்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஏற்க மறுத்து வேலை நிறுத்தத்தை தொடர்ந்ததால் ஜாக்டோ-ஜியோ பொறுப்பாளர்கள் மீது அவமதிப்பு வழக்கு பாய்ந்தது.

ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் வழக்குரைஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி அரசின் அடாவடித்தனங்களை 1.1.2016ஆம் தேதி முதல் பட்டியலிட்டு இவ்வளவு பொறுமை காத்த பின்னரும் அரசு அதை பரிசீலிக்க மறுத்துவரும் நிலையில் ஊழியர்களுக்கு உள்ள வழிதான் என்ன என்பதை நீதிமன்றமே சொல்லட்டும் என விளங்க வைத்த பின்னர் நீதிபதிகள் அரசின் காலந்தாழ்த்தும் நடவடிக்கையை உணர்ந்து கொண்டு உடனடியாக ஊதிய மாற்றத்தை அறிவிக்க வேண்டும் இல்லாவிட்டால் நாங்கள் அறிவிப்போம் என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பித்த பின்னரே, அரசாங்கம் ஊதிய மாற்ற அறிவிப்பை வெளியிட்டது, இந்த அறிவிப்பின் வாயிலாக ஊழியர்களின் 21 மாத ஊதிய மாற்ற வித்தியாச நிலுவைத் தொகை மறுக்கப்பட்டுள்ளது. இந்த 21 மாத ஊதிய மாற்ற வித்தியாச இழப்பும் இந்த போராட்டம் நடந்திராவிட்டால் 27 மாதங்களாகவோ அல்லது 31 மாதங்களாகவோ மாறியிருக்கக்கூடும்.

தற்போது இந்த 21 மாத நிலுவைத் தொகையை தர மறுக்கும் அரசின் போக்கை நீதிமன்றத்தின் வாயிலாக கேட்டுப் பெறுவது என்ற நிலைப்பாட்டில் ஜாக்டோ-ஜியோ பொறுப்பாளர்கள் இருந்தபோதிலும் நீதிமன்றத்தில் அதற்கான உத்தரவுகள் கிடைக்காமல் போகுமானால் இன்னொரு பெரிய போராட்டத்திற்கு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தயாராகவே வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. மத்திய அரசினைப் போல் மற்ற மாநில அரசுகளைப் போல் ஊதிய மாற்றதை அந்தந்த காலகட்டத்தில் ஏற்படுத்தாமல் காலம் தாழ்த்தி ஊழியர்களின் பலகட்ட போராட்டங்களுக்குப் பின் ஊதிய மாற்றத்தை ஏற்படுத்திவிட்டு ஊதிய மாற்ற வித்தியாச நிலுவைத் தொகையை அரசின் கஜானாவில் நிதியில்லை என காரணம் காட்டி தர மறுப்பது எந்த ஒரு மக்கள் நல அரசுக்கும் ஏற்புடைய செயல் அல்ல. ஒவ்வொரு ஊதிய மாற்றத்திலும் இதை ஒரு பழக்கமாக அரசு கடைபிடித்து வருவது ஒரு ஜனநாயக அரசாங்கம் அதன்கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும். சென்ற (2006) ஊதிய மாற்றத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்கள் 12 மாத ஊதிய மாற்ற வித்தியாச நிலுவைத் தொகையை இழந்துவிட்ட நிலையில் இந்த ஊதிய மாற்றத்தில் அது 21 மாதமாக மாறியிருக்கிறது.

இனிமேல் இப்படிப்பட்ட ஏமாற்றங்களை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் சுமக்காதவண்ணம் அதற்கான மாற்று வழிகளைக் காணவேண்டிய அவசர அவசியம் எழுந்துள்ளது. வேலை நிறுத்தம் செய்ய அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு உரிமை இல்லை எனக் கூறும் நீதிமன்றங்கள், அத்தகைய உரிமை மீறலை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எத்தகைய நிலையில் மேற்கொண்டார்கள் என்பதை பரிசீலித்து வேலை நிறுத்தம் அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்றா அல்லது தான்தோன்றித் தனமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்களா என்பதை ஆராய வேண்டும். அவரவர்களுக்கான உரிமைகளை, அரசுகள் தராத நிலையில், நீதி மன்றங்கள் நியாயங்களை சீர்தூக்கிப் பார்த்து சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும். வேலை நிறுத்த உரிமை ஊழியர்களுக்கு இல்லை எனக கூறும் நீதிமன்றங்கள் ஊழியர்களுக்கு அரசாங்கம் நியாயப்படி வழங்க வேண்டிய உரிமைகளை வழங்கிவிட்டதா என ஆராய்ந்து அதன்பிறகே உத்தரவிட வேண்டும். பிரச்சனை என்னவென்றே தெரியாத மூன்றாம் நபர்கள் தொடுக்கும் வழக்குகளை அனுமதிப்பதானது அரசு ஊழியர்களின் உரிமை மீட்புக்கான போராட்ட உணர்வுகளை அவமதிப்பதாகும். எல்லோருக்கும் பொதுவான நீதிமன்றங்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக தீர்ப்புகள் வழங்குவதான தோற்றம் மக்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையை குலைத்து விடும் என்பதை நீதிமன்றங்கள் உணர வேண்டும்.

2017ஆம் ஆண்டில் ஊதிய மாற்றம், புதிய பென்சனை திரும்பப் பெறுதல், பழைய ஓய்வூதியத்தையே தொடருதல், தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் காலவரை ஊதிய முறையை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்குதல், சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக கணக்கில் கொள்ளுதல் போன்ற கோரிக்கைகளும் முன்னிறுத்தப்பட்டு போராட்டங்கள் நடந்தன. இவை அனைத்தும் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு உத்தரவால் இப்போது கிடப்பில் உள்ளன. இவை எல்லாவற்றுக்குமான நியாயங்கள் நீதிமன்றத்தில் கிடைக்காவிட்டால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வீதிக்கு வந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. எப்படி வேலை நிறுத்தம் செய்வது சட்டப்படியான உரிமை இல்லை என்று நீதிமன்றங்கள் கூறுகின்றனவோ, அதேபோல் ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை, நிலுவைகளை ஒரு ரூபாய் கூட குறையாமல் அரசாங்கங்கள் வழங்கிட வேண்டிய நியாயத்தையும் நீதிமன்றங்கள் அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க வேண்டும். நீதிமன்றங்களின் தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது என்று மக்களும் ஊழியர்

களும் நினைக்காத வரைதான் நீதிமன்றத்தின் மீதுள்ள நம்பிக்கையும் மதிப்பும் குலையாமல் இருக்கும்.

2017-ல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்கள் உரிமைகளுக்காக பலகட்ட போராட்டங்களை நடத்தியது. புதிய ஓய்வூதியத் திட்டத்தைத் திரும்பப் பெற்று பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடருதல், மதிப்பூதியம், தொகுப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், 1.1.2016 முதல் வழங்கப்படாமல் இருந்த ஊதிய மாற்றத்தை அறிவித்தல், ஊதிய மாற்றம் ஏற்படுத்தும்முன் சென்ற ஊதிய மாற்றத்தில் உள்ள முரண்பாடுகளை களைதல், அனைத்து துறைவாரி சங்கங்களிடமும் கருத்துக்கள் கேட்டல் போன்ற பல கோரிக்கைகள் இந்தப் போராட்டங்களில் அடக்கம்.

தனித்த போராட்டங்களை தவிர்த்து காலதாமதமாகி வந்த ஊதிய மாற்றத்தை ஏற்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆசிரியர் அமைப்புகளுடன் ஒன்று சேர்ந்து ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் கீழ் பல போராட்டங்களை நடத்தியது. அதன் விளைவாகத்தான் 21 மாதம் கடந்த நிலையிலாவது ஊதிய மாற்றத்தை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பெற முடிந்துள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தனித்த போராட்டங்கள், ஜாக்டோ-ஜியோ கூட்டடைப்பினுடன் சேர்ந்து நடத்திய ஒன்றுபட்ட போராட்டங்கள் இவை தவிர்த்து சமூக அக்கறையுடன் சமூகத்தில் பிற பிரிவினரின் உரிமைகளுக்காக நடைபெற்ற போராட்டங்களுக்கு ஆதரவு அளித்தும் அவர்களுக்காக போராட்டங்களை நடத்தியும், தன்னுடைய சமூகப் பார்வையை, சமூக அக்கறையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அவ்வப்போது நிலைநிறுத்தி வந்திருக்கிறது, வருகிறது.

சென்ற ஆண்டில் ஜல்லிக்கட்டு போராட்டம், பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு எதிரான போராட்டம், நீட் தேர்வை ரத்து செய்தல், போக்குவரத்து தொழிலாளர்களுக்கான பென்சன் நிறுத்தி வைப்பு மற்றும் ஊதிய மாற்றம், இதர துறைவாரி, பிரிவுவாரி சங்கங்களின் போராட்டம், விவசாயிகளுக்கான போராட்டம், செவிலியர்களை நிரந்தரப்படுத்த நடந்த போராட்டம், மருத்துவ உயர் படிப்பு மாணவர் போராட்டம் என தொடர்ந்து சமூகப் பார்வையோடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் செயல்பட்டு வருகிறது.

நாள்தோறும் ஒரு போராட்டம் என தமிழகமே போராட்ட களமாகி வரும் நிலையில் இந்தப் போராட்டங்கள் நமக்கு போதிப்பது இதைத்தான்.

தொடர்ந்து போராடு
சிந்தித்து செயலாற்று
உற்சாகமாய் இரு
குறிக்கோளை நோக்கி முன்னேறு
வெற்றி வெகுவிரைவில்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அருவியைப் போல அது பாறைகளைக் கண்டு பயப்பட்டதில்லை. அருவி காட்டாறாக பாறைகளின் மீது மோதும்போது பாறைகளும் பிளப்பது போல் ஊழியர் ஒற்றுமையும் ஒன்றுபட்ட போராட்டங்களும் எவ்வளவு பெரிய தடைகளையும் தகர்த்தெறியும் வல்லமை கொண்டது என்பதை பலமுறை நாம் நிரூபித்திருக்கிறோம். இனியும் இதைவிட வலிமையோடு உரிமைக்கான போராட்டத்தில் முன் நிற்போம்! தடைகளை தகர்ப்போம்! உரிமைகளை மீட்டெடுப்போம்! 2018 ஆம் ஆண்டு நமக்கான உரிமைகளை நாம் போராடிப் பெற்ற ஆண்டாக சரித்திரம் எழுத வைப்போம்! ■

## அரசு ஊழியர் மாத இதழ்
## ஆயிரம் சந்தா வழங்கும் விழா

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தாராபுரம் வட்டக் கிளையின் 13வது பேரவைக் கூட்டம் கிளைத் தலைவர் பி.ராஜூ தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் வி.ஜெ.விதுர்வேந்தன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் பி.ரீட்டா வரவேற்றார். மாவட்டத் தலைவர் ஆர்.பாஸ்கரன் துவக்கவுரையாற்றினார். செயலாளர் என்.ஈஸ்வரமூர்த்தி வேலை அறிக்கை மற்றும் சி.பாலராஜசேகர் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தனர். மாவட்டச் செயலாளர் ஏ.அம்சராஜ், துறைவாரி சங்க நிர்வாகிகள் எஸ்.சத்தியவாணிமுத்து, ஞானசேகரன், மு.கண்ணன், ஆர்.குப்புசாமி, ஐ.ஷேக் முகமது ஆகியோர் வாழ்த்தி பேசினர். வட்டக் கிளையின் சார்பில் 1000 அரசு ஊழியர் மாத இதழ் சந்தாக்கான தொகையினை மாவட்ட நிர்வாகிகளிடமும், மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் மற்றும் மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோரிடம் வட்டக் கிளை நிர்வாகிகள் வழங்கினர். மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். இணைச் செயலாளர் எம்.மேகலிங்கம் நன்றி கூறினார். இதில் 30 பெண் ஊழியர்கள் உட்பட 110 பேர் பங்கேற்றனர்.* ■

ஜனவரி 24 தோழர் லெனின் நினைவு நாள்

# ரஷ்ய மகாத்மா!



காவியுடை தரித்த சுத்தானந்த பாரதியார் ரஷ்யப் புரட்சி குறித்தும் லெனின் குறித்தும் சிறப்பானதொரு நூல் படைத்துள்ளார். அந்நூலில் ரஷ்யப் புரட்சித் தலைவர் லெனினை மகாத்மா என வர்ணித்து தமது நூலுக்கு 'மகாத்மா லெனின்' எனப் பெயரிட்டுப் பெருமை சேர்த்துள்ளார்.

இந்தியாவில் மகாத்மா என்றால் காந்தியைத் தான் குறிக்கும். அத்தகைய மகத்தான பட்டத்தை இந்தியாவைச் சேர்ந்த சுத்தானந்த பாரதி லெனினுக்குச் சூட்டியது சாதாரணமானதன்று.

63 சூட்தோலா, காசி என்ற முகவரியிலிருந்து வெளியிடப்பட்ட அந்நூலுக்கு 'சோவியத் லேண்ட் பரிசு' வழங்கப்பட்டுள்ளதும் சிறப்பம்சமாகும்.

அந்நூலில் ஒரு வினோதச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். அது சோவியத் நாட்டில் லெனின் மறைந்தபின் ஏற்பட்ட வதந்தி பற்றியது.

"லெனின் இறந்துவிட்டார் என்பதைப் பல நாட்களுக்கு சாதாரண ரஷ்ய மக்கள் நம்பவில்லை. தனக்குப்பின் அதிகாரத்திற்கு வருபவர்கள், அவர்களாகவே அரசாங்கப் பொறுப்புப் பணியைத் திறம்பட அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் இறந்தது போல் பாசாங்கு செய்கிறார் என்று அவர்கள் கருதினர்." இத்தகைய வதந்திகளில் ஒன்று லெனின் தன்னுடைய மருத்துவரை வரவழைத்து, தான் இறந்துவிட்டதாகக் கருதுமளவிற்கு ஏதாவது செய்து உதவ வேண்டுமெனக் கேட்டு வேண்டிக் கொண்டாராம். அவர் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் தங்கவேண்டுமென மருத்துவர் ஆலோசனைகளைத் தந்தார். இந்த ரகசியத்தைத் தன் மனைவியைத் தவிர யாரும் அறியக் கூடாதென்று லெனின் கூறிவிட்டார். ஒருநாள் லெனின் தன் கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியே வந்து பின்புறக் கதவு வழியாக வெளியேறி கிரெம்ளின் மாளிகையை அடைந் தார். அவரிடம் அட்டை இருந்ததால் காவலாளிகள் அவரைத் தடுத்து நிறுத்தவில்லை என்பதுடன் அவர் தனது தொப்பியைத் தலையின் முன்புறம் இழுத்து விட்டிருந்ததால் யாரும் அடையாளம் காண முடியவில்லை. சோவியத்துக்களின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது; லெனின் சப்தமின்றி உள்ளே நுழைந்து விவாதங்களைக் கவனித்து அந்த வேலை வழக்கம்போல் நடை பெற்று வருவதைக் கண்டார். திருப்தியடைந்து அவர் தன் கண்ணாடிப் பெட்டிக்குத் திரும்பி வந்தார்.

இரண்டாவது நாளில் அவர் ஒரு தொழிற்சாலைக்குள் சென்றார். இரவு நேரத்தில் பல தொழிலாளிகள் வேலையில் ஈடுபட்டிருக்கவில்லை. லெனின் அவர்களிடம், அவர்களுடைய வாழ்க்கை நிலைமை மற்றும் சோவியத் நிர்வாகம் குறித்துக் கேட்டார்.

மூன்றாவது நாளில் லெனின் ஒரு ரயில் நிலையத்தை அடைந்து, ரயில் மூலம் தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றார்; அங்கே அவர் அனைத்தையும் கேட்டு, விவசாயிகள் நிலைமை சரியாக உள்ளது என்று திருப்தியடைந்து தனது நினைவிடத்திற்கு உரிய நேரத்தில் வந்தார்.

சுத்தானந்த பாரதி சோவியத் மக்களின் பின்வரும் நம்பிக்கையை வெளிப்படுத்தி நூலை முடிக்கிறார்.

"ஒருநாள் லெனின் தன் சக தோழர்களுடன் மீண்டும் பணியில் இறங்குவார். லெனினுடைய பேச்சு மற்றும் எழுத்துமுறை மற்றும் ஒரு சக்தி வாய்ந்த வெகுஜன சோவியத் பத்திரிகை வேண்டு மென்ற அவருடைய கருத்துக்கள் விவரிக்கப்படு கின்றன. எளிமையான, சாதாரண மக்கள் பேசுவது போன்ற மொழியையே லெனின் விரும்பினார். லெனினுடைய உவமானம், உருவணி முதலி யவை சாதாரண மக்கள் பயன்படுத்துபவையே என்பதுடன் எளிமையானவை மற்றும் ஊடுருவிச் செல்லக் கூடியவை. ஒரு விசயத்தை மேலும் தெளிவாகக் கூறப்பட்டதை மேலும் தெளிவாகக் கூறவும், ஐயத்திற்கிடமின்றிக் கூறவும் இத்தகைய வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார். தன்னிடைய கூற்றை நிரூபிக்கவும், எதிராளி கூறுவதை மறுக்கவும் அவர் புள்ளி விவரங்களை ஏராளமாகப் பயன்படுத்துவார்.

ஒரு வெகுஜன கம்யூனிஸ்ட் ஏட்டிற்கான லெனினுடைய வழிகாட்டுமுறை பதிவு செய்யப் பட்டுள்ளது. 200-400 வரிகள் எழுதுவதற்குப் பதிலாக 10-20 வரிகள் போதுமானதாகும்; ஒவ்வொரு கட்டுரையும் முடிந்த அளவிற்கு சுருக்கமானதாகவும் எளிமையானதாகவும் இருக்க வேண்டும்; ஒரு கோட்பாட்டை விவரிப்பதென் பது சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகளோடு சம்மந்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

லெனினுடைய மின்மயமாக்கும் திட்டமானது அவருக்கே உரியதென்றும், எப்போதும் நினை வில் இருப்பதென்றும் அவருடைய ஆதரவாளர் கள் கருதுவதையும் இந்நூலாசிரியர் பதிவு செய்துள்ளார். 1921ஆம் ஆண்டில் எதிர்ப்புரட்சி யாளர்கள் மாஸ்கோவைச் சுற்றி வளைத்திருந்த போது இது எழுதப்பட்டது. ஆனால்ஒரு புதிய சமூக அமைப்பிற்கு அடித்தளமிடுவதற்காக சோவியத் ரஷ்யாவை மிகப்பெருமளவிற்கு மின்மயமாக்குவதற்காகவும், கோர்க்கி உள்ளிட்ட கிராமங்களுக்கு மின்சாரம் உடனடியாகக் கிடைத் திடவும் லெனின் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். அவரையும், அவருடைய மக்களையும், மிகக்கொடிய அபாயங்கள் வெறித்து நோக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் மக்களுடைய புதிய வாழ்க்கைக்காக ஒரு திட்டத்தைத் தயாரிப்ப தற்காக லெனின் கனவு கண்டிருந்தார்.

கல்வி அறிவின்மையை ஒழிக்காமல் ஒரு சோஷலிச அமைப்பை உருவாக்க முடியாதென்ற லெனினுடைய கண்ணோட்டத்தை சுத்தானந்த பாரதியார் உற்சாகமாக விவரிக்கிறார்:-

"போல்ஷ்விக் அரசாங்கமானது கல்வி அறிவின்மையை ஒழிப்பதற்காகக் கிளம்பி விட்டது என்பதுடன் சோவியத் ஆட்சியில் கல்வி அறிவு குறித்து படிவங்களில் கேட்கப்படும் பகுதிகளில் காலியிடம் விடப்படுமளவிற்கு அனைவருக்கும் கல்வி புகட்டுவதை உத்தரவாதம் செய்கிறது; கல்வி அறிவின்மைக்கெதிரான போராட்டமானது, எதிர்ப் புரட்சிக்கெதிரான போராட்டத்தைப் போன்று முக்கியமானது என்று லெனின் கூறினார். கல்வி அறிவில்லாத நபரை அரசியல் ரீதியாக உணர்வு பெற்றவராக ஆக்கமுடியாது என்றும் கல்வி அறிவில்லாதவர் அரசியல் வட்டத்திற் கு வெளியேதான் இருப்பார் என்றும் லெனின் தன் உரைகளில் திரும்பத் திரும்ப கூறுவது வழக்கம். மக்களை கல்வி அறிவு பெற்றுள்ளவர்களாக ஆக்காமல், கலாச்சாரத்தை நேசிக்கும் தன்மையை அவர்களுக்குள் எழுப்பி விடாமல் கலாச்சாரம் மலரமுடியாது; எனவே சோஷலிசத்தின் கீழ் ஒரு புதிய கலாச்சாரம் பிறப்பதை உத்தரவாதம் செய்ய அனைத்து மக்களையும் கல்வி பெற்றவர்களாக்குவது அவசியமானதாகும்."

லெனினுடன் நடந்து கொண்டிருக்கும்போது நடைபெற்ற ஒரு சம்பவத்தை மாக்சிம் கார்க்கி விவரித்திருப்பதை சுத்தானந்த பாரதி படம் பிடித்துக் காட்டுகிறார். அதில் காலை நேரத்தில் சாலையோரத்தில் மகிழ்ச்சியாக சின்னஞ்சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்ததைப் பற்றி லெனின் குறிப்பிடுகிறார்:

"இந்தக் குழந்தைகள் நம்மைவிட மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வார்கள். நாம் சந்தித்த கசப் பான அனுபவங்களை அவர்கள் அனுபவிக்க நேரிடாது. கொடுமையான நாட்களை அவர்கள் சந்திக்க வேண்டியிராது.அவர்களைக் குறித்த நான் பொறாமைப்படவில்லை. நாம் செய்தது வரலாற் றில் வாழும்; சூழ்நிலைமையின் நிர்ப்பந்தங்களின் கீழ் நாம் கொடூரமாக இருக்க வேண்டியிருந்தது; ஆனால் எதிர்காலம் நம்மைக் குற்றவாளிகளாகக் கருதாது. உலகம் ஒருநாள் நம்மை சரியாகப் புரிந்து கொள்ளும்."

ஆம். அப்படித்தான் புரட்சிக்குப் பிந்தைய சோவியத் ரஷ்யாவில் ஒரு தலைமுறை பிறப்பு முதல் இறப்பு வரை மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்தது எனின் மிகையன்று.

- **பெரணமல்லூர் சேகரன்**

# எப்ஆர்டிஐ நிதித் தீர்மானம் மற்றும் வைப்புத் தொகை காப்பீடு மசோதா பொதுமக்களின் வங்கி சேமிப்புகளுக்கும் ஆபத்தா?

*'இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு'*

*- குறள் 385*

பெரும்பாலான பொதுமக்கள் தங்கள் பணத்தை வங்கி சேமிப்பாக வைத்துள்ள நிலையில், மத்தியில் சர்வாதிகார ஆட்சி நடத்திவரும் பிரதமர் மோடியின் திருவிளையாடல்களில் ஒன்றுதான் எப்ஆர்டிஐ (FRDI-Financial Resolution and Deposit Insurance Bill) மசோதா. ஏற்கனவே, மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட பணமதிப்பு நீக்கம் (Demonetisation), ஜிஎஸ்டி ஆகிய அதிர்வுகளால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை நலிவடைந்துள்ள நிலையில், மக்களின் வங்கி சேமிப்புகளுக்கும் ஆபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய இம் மசோதாவை குறித்து இங்ஙனம் விரிவாக காண்போம்.

### எப்ஆர்டிஐ மசோதா

உற்பத்தி மற்றும் சேவைத் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் திவாலாகும் பட்சத்தில் அவற்றின் பிரச்சனையை தீர்ப்பதற்கு சட்டங்கள் இருக்கின்றன. அதுபோல, வங்கிகள், **காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் மியூச்சுவல் பண்ட் உள்ளிட்ட நிதி நிறுவனங்கள் திவாலாகும் பட்சத்தில்** அந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு தெளிவான விதிமுறைகள் இல்லை. இந்த மசோதா மூலம் அதற்கான விதிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இதில் 'பெயில் இன்' (Bail in) என்னும் விதி இருக்கிறது. அதாவது வங்கி நிதி நெருக்கடியில் இருக்கும் பட்சத்தில் **வங்கியில் சேமிப்பு** (Bank Deposit) **செய்தவர்களின் பணத்தை மூலதனமாக** (Capital) **வைத்து** வங்கியை தொடர்ந்து இயக்கலாம் என்னும் விதி புதியதாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

எடுத்துக்காட்டாக, ஒருவர் ரூ.10,000/-ஐ தனது வங்கி சேமிப்புக் கணக்கில் வைத்துள்ளார். அவ்வங்கியின் வராக் கடன் அளவுக்கு அதிகமாகி, திவாலாகும் சூழ்நிலையில் தீர்வுக் கழகமானது அந்த வங்கி சேமிப்புக் கணக்கில் உள்ள ரூ.5,000/-ஐ மூலதனமாக மாற்ற அறிவுறுத்தும். அந்நிலையில், அந்த சேமிப்பாளரால் மீதமுள்ள ரூ.5,000/-ஐ மட்டுமே பயன்படுத்த இயலும். எனவே, வங்கி சேமிப்புகளுக்கு உத்திரவாதம் இல்லாத நிலை எழுந்துள்ளது.

தற்போதைய விதிமுறையான டிஐசிஜிசி சட்டம் 1961 (DICGC-Deposit Insurance and Credit Guarantee Corporation Act 1961)-இன்படி வங்கியில் ஒருவர் எத்தனை இலட்ச ரூபாய் சேமிப்பு செய்திருந்தாலும் வங்கியில் நிதி நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் அந்தத் தொகை மட்டுமே கிடைக்கும். அதற்குமேல் உள்ள தொகையை சேமிப்பு வைத்துள்ளவர்களின் அனுமதி இல்லாமல், வங்கிகள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இதற்கான தீர்வு கழகம் (Resolution Corporation) என்னும் புதிய அமைப்பு உருவாக்கப்பட இருக்கிறது. வங்கியின் வளர்ச்சிக்கு பொதுமக்களின் சேமிப்பை பயன்படுத்திக் கொள்ள இந்த கழகத்திற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இவ்வமைப்பில் ஒரு தலைவர் மற்றும் இந்திய நிதி அமைச்சகம், ரிசர்வ் வங்கி மற்றும் செபி உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

### தற்போதைய நிலை

இந்த நிதித் தீர்மானம் மற்றும் வைப்புத் தொகை காப்பீடு மசோதாவானது கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் தேதி மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது இந்த மசோதா

நாடாளுமன்றத்தின் கூட்டுக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. வரும் ஜனவரி திங்களில், இந்த கூட்டுக் குழுவின் முன்பாக ரிசர்வ் வங்கியின் கவர்னர் உரையாற்ற இருக்கிறார். அதன்பிறகு அனைத்து உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் விவாதித்து, தங்களது அறிக்கையை தாக்கல் செய்யும். தற்போது இம்மசோதாவானது குளிர்கால கூட்டத் தொடரில் இருந்து, பட்ஜெட் கூட்டத் தொடருக்கு இந்த மசோதா தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.




### பெரு நிறுவன வராக் கடன்களுக்கு பொதுமக்களா பொறுப்பு?

வராக் கடன் என்றால் - ஒரு வங்கியில் ஒருவர் தாம் பெற்ற கடனுக்கான மாதாந்திர செலுத்து தொகையினை 90 நாட்களுக்கு மேலாக செலுத்தாமல் இருப்பின், அக்கடன் வராக் கடன் என்று பெயர்.

எழுதப்பட்ட சொத்து (Written off) என்றால், அக்கடன் வசூலிப்பதற்கான சூழ்நிலைகள் ஏதுமில்லை என்ற நிலையில், அக்கடன் தொகையானது சம்பந்தப்பட்ட வங்கியின் சொத்து பொறுப்பு (Balance Sheet) பட்டியலில் இருந்து நீக்கப்படும். மேலும், அதற்கீடாக வங்கியின் சொத்தின் மதிப்பு குறைக்கப்படும்.

வராக் கடன் அதிகமாகும் பட்சத்தில்தான் ஒரு வங்கி திவால் சூழலுக்கு தள்ளப்படுகிறது. வராக் கடன்கள் ஒரு வங்கியின் மொத்த சொத்து மதிப்பில் 12 சதவீத்ததிற்கு மேல் இருக்கக் கூடாது. ரிசர்வ் வங்கியிடம், கடனை திருப்பி செலுத்தும் வசதி இருந்தும் செலுத்தாதவர்களின் பட்டியல் இருக்கிறது. மேலும், குறிப்பிட்ட 40 நபர்கள் மட்டுமே சுமார் ரூ.8 லட்சம் கோடி வரை செலுத்த வேண்டியுள்ளது. மற்றும் மொத்த வராக் கடன்களில் 75 சதவீதமானது பெரு நிறுவன முதலாளிகளால் செலுத்த வேண்டியுள்ளது.

**வராக் கடன்களின் வளர்ச்சி**

| காலம் | வராக் கடன் அளவு (ரூ. கோடியில்) | வராக் கடன் விகிதம் |
|---|---|---|
| மார்ச் 2016 | 5,71,841 | 7.69 |
| ஜூன் 2016 | 6,18,109 | 8.42 |
| செப்டம்பர் 2016 | 6,51,792 | 8.81 |
| டிசம்பர் 2016 | 6,77,443 | 9.18 |
| மார்ச் 2017 | 7,11,312 | 9.06 |
| ஜூன் 2017 | 8,29,338 | 10.21 |

பொதுத்துறை வங்கிகளில் உள்ள வராக் கடன்கள் பின்வருமாறு (ஜூன் 2017-ன்படி)

1. பாரத ஸ்டேட் வங்கியில் 1,88,068 கோடி
2. பஞ்சாப் நேஷனல் வங்கியில்57,712 கோடி
3. பேங்க் ஆப் இந்தியா வங்கியில் 51,019 கோடி
4. ஐடிபிஐ வங்கியில் 50,173 கோடி
5. பேங்க் ஆப் பரோடா வங்கியில் 46,173 கோடி

*மத்தியில் ஆளும் சர்வாதிகார அரசானது, இந்த வராக் கடன்களை வசூலிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல், எளிதாக கிடைக்கிறது என்பதற்காக பொதுமக்களின் டெபாசிட்டுகளை பயன்படுத்துவது சரியா? வங்கிகளில் எந்தவொரு பெரு நிறுவனங்களும், பெரு முதலாளிகளும் டெபாசிட் செய்வதில்லை. ரூ.115 லட்சம் கோடி மதிப்பிலான வங்கி டெபாசிட்களில் 70 சதவீதம் சாதாரண பொதுமக்கள் செய்திருக்கும் டெபாசிட்கள்தான். இவர்கள் டெபாசிட்களால்தான், வங்கிகள் கடன் வழங்க முடிகிறது. இவர்களின் டெபாசிட்களை அபகரிக்க ஏன் மத்திய அரசு நினைக்கிறது என்ற கேள்வி எழுகிறது.*

**மசோதாவின் மூலம்**

*இந்த பெயில் இன் கருத்து மற்றும் இம்மசோதாவானது கடந்த 2014-ல் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் வளர்ந்த நாடுகளால் புகுத்தப்பட்டது. அம்மாநாட்டில், கடந்த 2008-ன் பொருளாதார மந்த நிலையினால்* (Global Recession) *அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வங்கிகள் தத்தம் அரசுகளால் பெயில் இன் செய்யப்பட்டது. அந்த பொருளாதார மந்த நிலையை சமாளித்த இந்தியாவும், தற்போது வளர்ந்த நாடுகளின் கருத்தில் சிக்கிக் கொண்டுள்ளது.*

**மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்யும் மசோதா**

- *சைப்பிரஸ் நாட்டு பொதுமக்கள் இந்த பெயில் இன் முறைப்படி, தங்கள் வங்கி சேமிப்புகளில் 47.5 சதவீதம் இழந்துள்ளனர்*
- *2016 நவம்பர் 8-ல் கொண்டு வரப்பட்ட பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் பொதுமக்களிடம் ரொக்கமாக இருந்த பணத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது. தற்போது, வங்கி சேமிப்புக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது*
- *இந்திய பொருளாதாரமே, வங்கிகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது. பொதுமக்களின் சேமிப்புகள் இருந்தால்தான் கடன் கொடுக்க முடியும். ஆனால், இம்மசோதா சேமிப்புகளின் மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் வகையில் உள்ளது.*
- *இம்மசோதாவால் வங்கி சேமிப்புக் கணக்கில் உள்ள பணத்தை பொதுமக்கள் நிலையில்லா பங்கு மூலதனத்தில்* (Shares and Equities) *முதலீடு செய்யும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இம்முதலீடுகளும் பெரு முதலாளிகளுக்கு மேலும் பணமுதலைகள் ஆகவே வழிவகுக்கும். அப்பங்குகள் சரிவடையும்போது பொதுமக்கள் தங்கள் சேமிப்பை இழக்கும் சூழ்நிலை உருவாகிறது.*

**அறிவுரைகள்**

- *கடந்த 2003ஆம் ஆண்டு சிறிய தனியார் வங்கியான நெடுங்காடி வங்கியானது திவாலானது. அப்போது ரிசர்வ் வங்கி அறிவுரையின்படி பஞ்சாப் நேஷனல் வங்கியானது பொதுமக்களின் சேமிப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாவண்ணம் அவ்வங்கியை ஏற்று நடத்தியது. அதுபோன்ற கடந்த கால நடைமுறையை பின்பற்றலாம்.*
- *தற்போது ஒரு லட்ச ரூபாய் வரைக்குமான டெபாசிட்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது. 5000 ரூபாயில் ஆரம்பித்த இந்த காப்பீடு 1993ஆம் ஆண்டு ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக இந்த வரம்பினை உயர்த்தவில்லை. தற்போதைய சூழலில் இந்த அளவினை உயர்த்த வேண்டும்.*
- *கடன் மீட்பு தீர்ப்பாயம்* (Debt Recovery Tribunal) *மற்றும் சர்பாசி சட்டம்* (SARFAESI Act 2002) *ஆகியவை நடைமுறையில் உள்ள நிலையில், விஜய் மல்லையா, அம்பானி மற்றும் அதானி ஆகியோர் செலுத்த வேண்டிய வராக் கடன்களுக்கு அப்பாவி பொதுமக்களா பொறுப்பு?*

- **லூ.ஜோசில்வஸ்டர்,**
*முதுநிலை ஆய்வாளர் (கூட்டுறவு சங்கங்கள்), தூத்துக்குடி*

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

நாள் : 18.12.2017

**மாண்புமிகு தலைமை நீதிபதி** அவர்கள்

சென்னை உயர் நீதிமன்றம்

சென்னை 600104.

மேன்மைதங்கிய சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு,

வணக்கம்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகள் மற்றும் அரசுத் துறைகளில் பணிபுரியும் நாங்கள் ஜாக்டோ-ஜியோ என்ற பெயரில் கூட்டமைப்பாக இயங்கி வருகிறோம். கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அரசு வழங்க வேண்டிய நியாயமான உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருவதால், அதைப் பெறுவதற்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசுக்கு இணையான ஊதியம் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் என்று ஒப்புக்கொண்ட தமிழக அரசு அதைத் தராமல் கடந்த இருபது ஆண்டுகளாக ஏமாற்றி வருகின்ற போதிலும், அதனைப் பெறுவதற்காக மக்கள் நலன் மற்றும் மாணவர்கள் கல்வி பாதிக்காத அளவில், அரசாங்கத்திடம் பல்வேறு பிரதிநிதித்துவங்கள், கோரிக்கை மனுக்கள், முறையீடுகள் போன்றவைகள் மூலமாக தொடர் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். ஆனால் அரசாங்கம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கோரிக்கைகளை உதாசீனப்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல் 2016ம் ஆண்டு ஏற்படுத்த வேண்டிய ஊதிய மாற்றத்தை - மத்திய அரசு ஊழியர்களுக்கு அது வழங்கப்பட்டு அந்த ஊழியர்கள் அதற்கான புதிய ஊதியம் மற்றும் 1.1.2016 முதலான ஊதிய நிலுவைத் தொகைகளையும் பெற்றுவிட்ட நிலையில் - தமிழக அரசு ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக வழங்காமல் காலம் கடத்தி வந்ததால் பொதுமக்களை பாதிக்காத அனைத்து வகையான போராட்டங்களையும் முன்னெடுத்து, அரசுக்கு எங்கள் நிலைப்பாட்டை உணர்த்திய பின்னரும் அரசாங்கம் எங்கள் வாழ்வாதார கோரிக்கையான ஊதிய மாற்றம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெறுதல், ஊதிய முரண்பாடுகளைக் களைதல் போன்ற எதைக் குறித்தும் சிறிதும் கவலைப்படாமல் தொடர்ந்து கால நீட்டிப்பு செய்து வந்த சூழ்நிலையில் வேறு வழியில்லாமல் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு உந்தப்பட்டோம் என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

திரும்பப் பெறுவதாக ஒப்புக்கொள்ளப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் இன்னும் திரும்பப் பெறப்படவில்லை. வல்லுநர் குழுவின் அறிக்கையும் பெறப்படவில்லை, காலவரையும் நவம்பர் 30க்கு பின்னர் நீட்டிக்கப்படவில்லை.

மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி.ஜெயலலிதா அவர்கள் 2011ஆம் ஆண்டு தன்னுடைய தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க. ஆட்சி அமைத்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்படும் என்று அறிவித்தது இன்று வரை செயலாக்கப்படவில்லை. அதை வலியுறுத்தி பல போராட்டங்கள் நடத்திய பின்னர் 2016ஆம் ஆண்டு சட்டசபையில் சட்டசபை விதி எண்.110ன் கீழ் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெறுவது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அதன்பேரில் பரிசீலிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டார். திருமதி சாந்தா ஷீலா நாயர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அதன் காலவரை நான்குமுறை நீட்டிப்பு செய்யப்பட்டு அதன்பிறகு அது என்னவாயிற்று என்று தெரியாமலேயே கைவிடப்பட்ட நிலையில், அதுகுறித்து கேட்டு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும்

தீவிரப் போராட்டத்தில் இறங்கிய பின்னர், ஸ்ரீதர் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் செப்டம்பர் 2017ல் புதிதாக ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. அந்த வல்லுநர் குழு 2017 நவம்பர் 30க்குள் அது அறிக்கை அளிக்கும் என்றும் அதன்பேரில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்த தமிழக அரசு, நவம்பர் 30ம் தேதி வல்லுநர் குழுவின் அறிக்கையை பெறாமல் விட்டதோடு, அது குறித்து எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்ட வழக்கு மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் விசாரணைக்கு வந்தபோது நவம்பர் 30ம் தேதிக்குள் பங்களிப்பு ஓய்வூதியம் திரும்பப் பெறுவது குறித்த வல்லுநர் குழு அறிக்கை நிச்சயமாக பெற்று அதன்பேரில் முடிவெடுக்கப்படும் என்று ஒப்புக்கொண்ட அரசு, தற்போது நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குறுதியை மீறியதோடு மட்டுமல்லாமல், வல்லுநர் குழு என்ன ஆனது என்பது குறித்தும் இதுவரை அறிக்கை எதுவும் வெளியிடவில்லை. மதுரை உயர் நீதிமன்றத்தில் அரசுத் தலைமை வழக்குரைஞரின் உறுதிமொழியை மாண்புமிகு நீதியரசர்கள் தங்கள் இடைக்கால உத்தரவில் பதிவு செய்துள்ள நிலையில், தமிழக அரசின் இந்த செயல்பாடு நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் செயலாகும். உயர்நீதிமன்றம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான உரிமைகளை அரசாங்கம் நிறைவேற்ற உத்தரவிடுவதாக உறுதியளித்துள்ளதால் நாங்கள் அரசின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் குறித்த மௌன மறுப்பை எதிர்த்து போராட்ட களம் போகாமல் காத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களின் பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கிறோம்.

ஊதிய மாற்றம் முரண்பாடுகளுடன் அறிவிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், 21 மாத ஊதிய மாற்ற வித்தியாச நிலுவைத் தொகையையும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க மறுத்துள்ளது அநீதியின் உச்சகட்டம்

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பொதுமக்களுக்கும், சமுதாயத்திற்கும் பணிசெய்ய நியமிக்கப்பட்டுள்ள சேவகர்களே என்பதை எப்போதும் நாங்கள் மறந்தது கிடையாது. அதேசமயம் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று சட்டங்களாலும், நிர்வாக விதிமுறைகளாலும் உறுதிபடுத்தப்பட்டுள்ள உரிமைகளை தருவதற்கு அரசாங்கம் காலதாமதம் செய்வதும், மறுப்பதும், குறைப்பதும், நிலுவைகளை தர முடியாது எனக் கூறுவதும் எந்த வகையிலும் ஏற்கமுடியாது. 2014ஆம் ஆண்டில் நிதியமைச்சராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் சட்டமன்றத்தில், 2014-15ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் வரவு-செலவு திட்ட உரையில் “2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது. முந்தைய ஊதியக் குழுக்கள் போலன்றி, இக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும், பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது'' என தெரிவித்தது பொய்யுரை என்று தற்போது உறுதியாகிவிட்ட நிலையில் உரிமைகளை போராடிப் பெறுவதைத் தவிர வேறு வழி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு இல்லை. கெஞ்சிப் பார்த்து, கோரிப் பார்த்து, ஆர்ப்பாட்டம் நடத்திப் பார்த்து அசையாத அரசை, இறுதிக் கட்டமாக அதன் நிர்வாகத்தை வேலை நிறுத்தப் போராட்டத்தின் மூலம் நிறுத்தி கவனத்தை ஈர்ப்பதைத் தவிர வேறு ஆயுதம் எதுவும் எங்களுக்குக் கிடையாது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்திற்கு தடை விதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கில் மதுரை உயர் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்ட எங்கள் தரப்பு வழக்குரைஞர், மாண்பமை நீதியரசர்களிடம், அரசாங்கம் ஒப்புக்கொண்டு பல ஆண்டுகளாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க மறுத்து வரும் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை பட்டியலிட்டு வாதிட்டார். அதை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள், 13.10.2017ம் தேதிக்குள் ஊதிய மாற்றத்தை தமிழக அரசு அறிவிக்க வேண்டும் இல்லாவிட்டால் 23.10.2017ம் தேதி நீதிமன்றம் அறிவிக்கும் என கண்டிப்பான உத்தரவிட்டதோடு, அதுவரை எங்கள் போராட்டத்தை நிறுத்தி வைக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் போராட்டத்தை நிறுத்தி வைத்தோம்.

ஆனால் 11.10.2017ம் தேதி ஊதிய,மாற்றத்தை, முரண்பாடுகளுடன் அறிவித்த தமிழக அரசு, 21 மாத ஊதிய மாற்ற வித்தியாச நிலுவைத் தொகையை தர முடியாது எனவும் அறிவித்துள்ளது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மத்திய அரசு ஊழியர்கள் என அனைவரும் ஊதிய மாற்றத்தின் முழுப் பலனையும் பெற்றுள்ள நிலையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது மாபெரும் அநீதியாகும். இந்த நிலையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களாகிய நாங்கள் அனைவரும் சென்னை உயர்நீதிமன்றத்தைத்தான் நம்பியிருக்கிறோம். வேலை நிறுத்தப் போராட்டம் சட்டப்படியான உரிமையல்ல எனக் கூறும் மாண்பமை

நீதிமன்றங்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்படியான உரிமைகளை அரசாங்கங்கள் பறிப்பதையும், நிறுத்தி வைப்பதையும் அனுமதிக்கக் கூடாது. இப்போது, தமிழக அரசு எங்களுக்கு இழைத்துள்ள அநீதியை தட்டிக்கேட்டு சென்னை உயர்நீதிமன்றம் அரசாங்கத்திற்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்கும் என்ற திடமான நம்பிக்கையில் போராட்டங்களுக்கு போகாமல் காத்திருக்கிறோம்.

ஒப்புகொண்டபடி சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காமல் ஊதிய மாற்ற அறிவிப்பு வந்துள்ளது ஊழியர்களிடையே மீண்டும் போராட்டக்களம் போக வேண்டும் என்ற கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சத்துணவு பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம பஞ்சாயத்து செயலர் மற்றும் அனைத்துத் துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற தனி கோரிக்கை வைக்கப்பட்டு, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றத்தில் வெளியிட்ட சட்டமன்ற விதி எண்.110ன் கீழான அறிக்கையில் இது குறித்து ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அலுவலர் குழு பரிசீலித்து அறிக்கை தாக்கல் செய்யும் என தெரிவித்திருந்தார். அது குறித்த கோரிக்கைகள் அரசிடமும், அலுவலர் குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால் ஊதிய மாற்றத்திற்காக அமைக்கப்பட்ட அலுவலர் குழு அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 2.57 காரணியால் பெருக்கி திருத்திய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவித்து குறைந்தபட்ச ஊதியம் ரூ.3,000/- ஆகவும் அதிகபட்ச ஊதியம் ரூ,11,000/- ஆகவும் ஊதிய மாற்ற அரசாணையில் தெரிவித்துள்ளது மேற்கண்ட பணியாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. மாண்பமை தலைமை நீதிபதி அவர்கள் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க சத்துணவு பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம பஞ்சாயத்து செயலர் மற்றும் அனைத்துத் துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட அரசுக்கு உத்தரவிட வேண்டும் என பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகிய தாங்கள் எங்கள் கோரிக்கையின் பேரில் உள்ள நியாயத்தையும், சட்டப்படி வழங்க வேண்டிய 21 மாத வித்தியாச நிலுவையை மறுத்துள்ள அரசாங்கத்தின் நயவஞ்சகத்தையும், நீதிமன்றத்தில் கொடுத்த உறுதிமொழிப்படி வல்லுநர் குழுவின் அறிக்கையை நவம்பர் 30ம் தேதிக்குள் பெற்று அதன்மேல் நடவடிக்கை மேற்கொள்ளாததுடன் அதுபற்றி அறிவிப்பு எதையும் வெளியிடாமல் ஏமாற்றியிருக்கும் செயலையும், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவதாக ஒப்புக்கொண்டு அதை ஊதிய மாற்றத்தில் செய்யாமல் விட்டுள்ள துரோகத்தையும், உரிய அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகள் மூலம் சரிசெய்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட தமிழகத்தின் அரசின் பல துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சட்டப்படியும், அரசியலமைப்புச் சட்டப்படியும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை பெற்றுத்தர வேண்டுமாய் பணிந்து வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

சட்டப்படி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பெற வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுமானால் நாங்கள் மீண்டும் போராட்டக் களம் போக வேண்டிய நிர்ப்பந்தம் எழும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். மாண்பமை தலைமை நீதிபதியாகிய தாங்கள் எங்களுக்கான நியாயங்களை நிச்சயம் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கூட்டாக இந்த கோரிக்கை மனுவை தங்களுக்கு நேரடியாகவும் மாவட்ட நீதிபதிகள் வாயிலாகவும் பணிந்து சமர்ப்பிக்கிறோம். போராட்டங்களை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தேடிச் செல்லவில்லை. அதேசமயம் போராட்டங்கள் எங்கள் மீது திணிக்கப்பட்டால் நாங்கள் வீதியில் இறங்கி போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் பணிந்து தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

ஒருங்கிணைப்பாளர்கள்

இணைப்பு : 1. நீதிமன்ற இடைக்கால ஆணை

2. அரசுக்கு வழங்கியுள்ள கோரிக்கை முறையீடு நகல்

■

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

**(Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

பெறுநர் நாள் 15.12.2017

மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள்
புனித ஜார்ஜ் கோட்டை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

ஐயா,

பொருள் : ஊதிய மாற்றம் - 1.1.2016 முதல் அரசு ஊழியர்-ஆசிரியர்களுக்கு ஊதியமாற்றம் செய்யப்பட்டமை - மத்திய அரசு ஊழியருக்கு இணையான ஊதியச் சமநிலை மறுக்கப்பட்டுள்ளமை மற்றும் 21 மாத ஊதிய நிலுவை நிறுத்திவைக்கப்பட்டுள்ளமை மற்றும் ஊதிய முரண்பாடுகள் களையப்படாமை - மாண்புமிகு முன்னாள் முதல்வர் அறிவித்தது போல் சிறப்பு காலமுறை ஊதியமுறை ஒழிக்கப்படாமை - குறைகளை களைந்திடவும் ஆசிரிய,ஊழியர்-அரசு நல்லிணக்கம் பேணிடவும் கோருதல் மற்றும் பேச்சுவார்த்தைக்கு இணக்கமான நேரம் கோருதல் தொடர்பாக

**அரசு ஊழியர்-ஆசிரியர்களுக்கான ஊதிய மாற்றம்!**

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் 01.01.2016ம் தேதிக்குப் பின்னர் நடத்திய பலவிதமான போராட்டங்களுக்குப் பின்னர், நீதிமன்ற தலையீட்டின் பேரில் அரசாங்கம், தமிழக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ஊதிய மாற்றத்தை 11.10.2017ஆம் தேதி அறிவித்துள்ளது. இந்த ஊதிய மாற்ற அறிவிப்பு கூட நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தின் பேரிலேயே அரசு அறிவித்துள்ளது.

**போராட்டங்களும், உயர்நீதிமன்ற உத்தரவுகளும்!**

ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழு அமைப்பதற்கு சில போராட்டங்கள், அமைக்கப்பட்ட அலுவலர் குழுவில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத அனைத்து சங்கங்களும் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க அனுமதி கோரி சில போராட்டங்கள், அனைத்து சங்கங்களும் தங்கள் கருத்துக்களை நேரடியாக தெரிவிக்க ஒரு போராட்டம், அலுவலர் குழு குறிப்பிட்ட காலவரையறைக்குள் பரிந்துரைகளை சமர்ப்பிக்க வலியுறுத்திப் போராட்டம், அதுவும் கைமீறியபோது காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் என பலவிதமான போராட்டங்களுக்குப் பிறகு, மூன்றாமவர் ஒருவர் தொடர்ந்த வழக்கில் நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாகி, அவ்வழக்கில் உயர்நீதிமன்றத்தின் கண்டிப்பான உத்தரவுக்குப் பிறகு, 21 மாதங்கள் தாமதத்திற்குப் பிறகு ஊதிய மாற்றம் செய்ய நேரிட்டது.

**அலுவலர் குழுவும், நிலுவைத் தொகையும்,**
**மாண்புமிகு முன்னாள் முதல்வரின் உறுதிமொழியும்!**

2014ஆம் ஆண்டில், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்த திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், அம்மா முன்னிலையில் சட்டமன்றத்தில் 2014-15ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட உரையை வாசித்தபோது, ”2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது.

முந்தைய ஊதியக் குழுக்கள் போலன்றி, இக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும், பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத் தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது'' என தெரிவித்திருந்த நிலையில், தற்போது அம்மா அவர்களின் வழியில் செயல்படுவதாக அறிவித்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1.1.2016ம் தேதி முதல் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையை கருத்தியலாக மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஊதியமாற்றத்தை அமலாக்கியுள்ளமை, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மிகப்பெரிய ஊதிய இழப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசு ஊழியர்கள் தங்கள் ஊதிய நிலுவைத் தொகையை 01.01.2016 முதல் ரொக்கமாக பெற்றுள்ள நிலையில், தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்கள் 21 மாத ஊதிய நிலுவைத் தொகையை இழக்க வைத்துள்ள செயலானது, ஊழியர்கள், ஆசிரியர்களை வஞ்சிக்கும் போக்குடன் நடத்துகிறது என்ற தோற்றத்தை அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் மறைந்த முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் செயல்படும் அரசு என்றால் மறைந்த மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் எனவும் **தமிழக முதல்வர் அவர்கள், மத்திய அரசு ஊழியர்களுக்கு நடுவணரசு ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை ரொக்கமாக வழங்கியது போல் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை உடன் வழங்கிட வேண்டும்** என்று கேட்டுக் கொள்கிறோம்.

### மறுக்கப்பட்டுள்ள, மத்திய அரசுக்கு இணையான ஊதியமும், படிகளும்

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கியுள்ளதாக அரசாணையில் குறிப்பிடப்பட்டிருப்பினும், குறைந்தபட்ச ஊதியம் முதல் அனைத்து நிலைகளிலும் ஊதியம், வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுத் தொகை, குறைந்தபட்ச ஓய்வூதியம் போன்ற அனைத்து இனங்களிலும் மத்திய அரசு ஊழியர்கள் பெறுவதை விட மிகக்குறைவான தொகையை தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஊதிய மாற்றத்திலும் இதுகாறும் பெற்றுவந்த ஊதியச் சமநிலை கூட சீர்குலைக்கப்பட்டிருப்பதும் மத்திய அரசு ஊழியர்கள் பெறும் பல்வேறு சலுகைகளில் சிலவற்றைக்கூட தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்காமல் புறக்கணித்துள்ளதும் தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதியாகும். **மக்கள் நலனிலும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனிலும் அக்கறை கொண்டுள்ளதாக கூறும் இவ்வரசு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தையும், படிகளையும் வழங்கிட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்** என்று ஜாக்டோ-ஜியோ கேட்டுக் கொள்கிறது.

### சரி செய்யப்படாத ஊதிய முரண்பாடுகள்

அலுவலர் குழுவிடம் சங்கங்கள் வைத்த கோரிக்கைகளில் முதன்மையான கோரிக்கை யாதெனில், கடந்த ஊதிய மாற்றத்தினால் எழுந்த முரண்பாடுகளை சரி செய்த பின்னரே 1.1.2016க்கான ஊதிய மாற்றத்தை அறிவிக்க வேண்டும் என்பதாகும். இது குறித்து அனைத்து சங்க அமைப்புகளும் மாண்புமிகு முதல்வரிடமும், அலுவலர் குழுவிடமும் முன்வைத்த கோரிக்கைகள் மறுதலிக்கப்பட்டுள்ளன. எனவே **அறிவிக்கப்பட்டுள்ள ஊதிய மாற்றத்தை, சென்ற ஊதிய மாற்றத்தின் போது ஏற்பட்டு இதுநாள் வரை சரிசெய்யப்படாமல் இருக்கும் ஊதிய முரண்களை உடனடியாக சரிசெய்து சீர்செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்** என ஜாக்டோ-ஜியோ வலியுறுத்துகிறது.

### குறைந்தபட்ச அடிப்படை ஊதியமும், குறைந்தபட்ச ஓய்வூதியமும்

மத்திய அரசு அமைத்த 7வது ஊதியக்குழு, தற்போதைய விலைவாசிநிலை மற்றும் இதர அடிப்படை காரணிகளை ஆய்ந்து, குறைந்தபட்ச ஊதியமாக ரூ.18,000/- என பரிந்துரை செய்ததன் அடிப்படையில் , நடுவண் அரசு அடிப்படை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியமாக ரூ,18,000/- என நிர்ணயித்து வழங்கிவரும் நிலையில், மாநில அரசின் ஊழியர்களுக்கு எவ்வித விஞ்ஞான அடிப்படையுமின்றி குறைந்தபட்ச ஊதியமாக ரூ.15,700/- ஆக நிர்ணயித்துள்ளதும், அதேபோல் மத்திய அரசு ஊழியரின் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.9.000/- ஆக உள்ள நிலையில் தமிழக அரசு

ஊழியர்களுக்கு ரூ.7,850/-ஐ குறைந்தபட்ச ஓய்வூதியமாக நிர்ணயித்துள்ளதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளாகும். எனவே, **குறைந்தபட்ச ஊதியமாக ரூ.18,000/- எனவும், குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.9,000/- எனவும் நிர்ணயித்து மத்திய அரசுக்கு இணையான ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை உறுதி செய்ய வேண்டும்** என்று கேட்டுக் கொள்கிறோம்.

**ஒழிக்கப்பட வேண்டிய சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம்**

கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், சமூகநலத்துறை உடனாட்கள் மற்றும் ஆசிரியர் பணித்தொகுதியில் வரும் பகுதிநேர ஆசிரியர்கள், தொகுப்பூதிய ஆசிரியர்கள், கணினி ஆசிரியர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்-ஆசிரியர்களின் உழைப்பு, முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

மேற்படி சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற தனி கோரிக்கை வைக்கப்பட்டு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றத்தில் வெளியிட்ட சட்டமன்ற விதி எண்.110ன் கீழான அறிக்கையில் இது குறித்து ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அலுவலர் குழு பரிசீலித்து அறிக்கை தாக்கல் செய்யும் என தெரிவித்திருந்தார். அது குறித்த கோரிக்கைகள் அரசிடமும், அலுவலர் குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அதற்கு மாறாக அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 2.57 காரணியால் பெருக்கி திருத்திய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு குறைந்தபட்ச ஊதியம் ரூ.3,000/- ஆகவும் அதிகபட்ச ஊதியம் ரூ,11,000/- ஆகவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது மேற்கண்ட ஊழியர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலிறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

**ஊதிய மாற்றம் அரசின் கருணையல்ல - ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் உரிமை!**

முதல்வர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் ஊதிய மாற்றத்தின் காரணமாக அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினங்களை தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன் கருதி மாநில அரசே முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது புதுமையாக உள்ளது. ஒரு மாநில அரசு அதன் ஊழியர்களுக்கு இந்திய அரசியலமைப்பு சட்ட வழிகாட்டுதலின் படியும், நாடாளுமன்றம், பாராளுமன்றம் வகுத்துள்ள கோட்பாடுகளின் படியும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகள் படியும், நிறைவான ஊதியத்தை உறுதிப்படுத்த வேண்டியதும், நிலை நிறுத்துவதும், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஊதியங்களை பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப திருத்தி அமைக்க வேண்டியதும் அதன் கடமையும், பொறுப்புமாகும் என்று தெரிவித்துள்ளதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதேசமயம் மாநில அரசின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இம்மாநில முன்னேற்றத்திற்காகவும், அரசு திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதிலும், அரசின் வருவாயை பெருக்க அரசு தீட்டும் திட்டங்களை முழுமையுடன் செயல்படுத்தவும் தயாராகவும் இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே மாநில அரசு அதன் ஊழியர்களுக்கு ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தும் ஊதிய மாற்றம் என்பது கருணையல்ல அது அந்த மாநில அரசின் கடமையும் உரிமையுமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

**அலுவலர் குழுவின் ஆய்வு எல்லைக்கு அப்பாற்பட்ட பரிந்துரை!**

மத்திய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும்

முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வைகுறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழுநோயாளிகள் கழகம், தேசிய ஊரக சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப்பணி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம், போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக் கூடியவை அல்ல. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட செவிலியர்கள் கூட ஒப்பந்த அடிப்படையில் மிகக்குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு உயிர்காக்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்,

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சார்புடைய நிறுவனங்கள் போல் புதிதாக துவக்கப்படும் அலுவலகங்களில் அமர்த்தப்படும் பணியாளர்கள், ஒப்பந்த முறையிலான அடிமாட்டு கூலிமுறையில் அமர்த்தப்படும் போக்கானது உடனடியாக கைவிடப்பட்டு ஏற்கெனவே மேற்கண்ட மத்திய / மாநில அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசு, முறையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கவும், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தொகுப்பூதிய/ ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்க வேண்டும் என்றும் பல போராட்டங்களை நடத்திவரும் சூழ்நிலையில், ஊதிய மாற்றம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் (செய்தி வெளியீடு எண்.678 நாள் 11.10.2017), அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ள தக்க பரிந்துரைகளை அளித்திட "பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு பரிந்துரையை அளிக்க ஊதிய மாற்ற அலுவலர் குழுவின் ஆய்வெல்லைக்குள் இல்லை என்பதுடன் அதன் ஆய்வு வரம்பு எல்லை, மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களின் அடிப்படையில் மாநில அரசில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதத்தை மாற்றியமைப்பது குறித்து பரிந்துரைகள் வழங்குவது மட்டுமே.

எனவே, ஏற்கெனவே அரசு அலுவலகங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பாமல் விட்டுவிடுதற்கான ஏற்பாடுகளையும், வெளிமுகமை மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்களை அரசுத் துறைகளில் கொண்டு வருவதன் மூலம் மக்கள் திட்டங்கள் மற்றும் மக்களுக்கான சேவைகளில் குறைபாடுகள் ஏற்படுவதை தவிர்க்கவும், மக்கள் நலத்திட்டங்கள் முழுமையாக மக்களுக்கு கொண்டு சேர்க்க அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள நிரந்த அரசு ஊழியர்களால் மட்டுமே முடியும் என்பதையும் அரசுக்கு விளக்க கடமைப்பட்டிருக்கிறோம். எனவே அலுவலர் குழு தனது அதிகார எல்லையை மீறி பரிந்துரைத்துள்ள "பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) அமைப்பதை அரசு கைவிட வேண்டும் என்று ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

**ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் கொடுமை!**

சென்ற ஊதிய மாற்றத்தில் அரசு செய்த இமாலயப் பிழை, இடைநிலை ஆசிரியர்களின் சம்பள உயர்வை பெரிதும் பாதித்துள்ளது. சென்ற ஊதிய மாற்றத்தில் அவர்களது தர ஊதியத்தை ரூ.4200 ஆக நிர்ணயம் செய்யாமல் ரூ.2800/-ஆக நிர்ணயம் செய்ததன் மூலம் இடைநிலை ஆசிரியர்கள் அதற்கான தாக்கீதுகள், பிரதிநிதித்துவங்கள், முறையீடுகள், போராட்டங்கள் என நடவடிக்கை மேற்கொண்ட பின்னர் அவர்களுக்கு தர ஊதியம் உயர்த்தப்படாமல் தனி உதியமாக ரூ.750/- வழங்கப்பட்டது. ஆனால் தற்போதைய ஊதிய மாற்றத்தில் ஊதியக்கட்டு மற்றும் தர ஊதியம்

ஒழிக்கப்பட்டு அவை ''சம்பள நிலை''யாக மாற்றப்பட்டுள்ளதால் அவர்கள் பெற்றுவந்த தனி ஊதியம் தற்போதைய சம்பள நிலைக்கு எடுத்துக்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் இடைநிலை ஆசிரியர்கள் மிகுந்த குறைவான சம்பள நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து அரசாங்கத்திடம் பல்வேறு முறையீடுகள் கொடுத்திருந்த போதிலும், ஊதிய மாற்ற அலுவலர் குழுவிடம் கூட இது குறித்து விளக்கிக்கூறி குறிப்பாணைகள் அளித்திருந்தும், உடனடியாக முழுக்கவனம் செலுத்த வேண்டிய இடைநிலை ஆசிரியர்கள் சம்பள நிர்ணயித்தில் அலுவலர் குழுவும் அரசும் கொஞ்சம்கூட கவனம் செலுத்தவில்லை. இடைநிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலையை சரி செய்யப்பட வேண்டும்.

அதேபோல், உயர்நிலை மற்றும் மேல்நிலை பட்டாதாரி ஆசிரியர்கள், தொழிற்கல்வி ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கான ஊதியமாற்றமும் பெருத்த முரண்பாடுகளுடன் செய்யப்பட்டுள்ளது. மேற்படி முரண்பாடுகளும் உடனடியாக களையப்பட வேண்டும் என ஜாக்டோ-ஜியோ வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**அமைச்சுப் பணியாளரது ஊதிய மாற்றமும் ஒழுங்கமைக்கப்படவில்லை!**

அரசுத்துறைகளில் எந்த ஒரு பணியும் திட்டமிடுவதிலிருந்து செயலாக்கம் வரை அனைத்துப் பணிகளிலும் அமைச்சுப்பணியையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள, உரிய அறிவியல் ரீதியான அளவீடுகளின் அடிப்படையில் அமைச்சுப்பணிப் பிரிவின் கீழ் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படாததாலும், ஓய்வு, பணித் துறப்பு, இறப்பு மற்றும் பதவி உயர்வு போன்றவற்றால் காலியான அமைச்சுப் பணியிடங்கள் காலத்தே நிரப்பப்படாததாலும் அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள அமைச்சுப் பணியாளர்கள் கடுமையான பணிப்பளுவை சுமந்து கொண்டு அல்லல்பட்டு வருகின்றனர். அரசுக்கும், துறைக்கும் எதிராக தொடுக்கப்படும் நீதிமன்ற வழக்குகளில் சட்டம் பயின்ற வழக்கறிஞர்கள் தயாரிக்கும் வாத உரைகளின் மீதான எதிர் உறுதி ஆவணம் ஆயத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளில் அமைச்சுப் பணியாளர்களின் மூளை உழைப்பு பெரும்பங்கை வகிக்கிறது. எனினும் ஒவ்வொரு ஊதிய மாற்றத்தின்போதும் அமைச்சுப் பணியாளர்களின் ஊதியம் அவர்களின் பணித் தன்மைக்கேற்ப நிர்ணயிக்கப்படவில்லை. குறிப்பாக 1.6.88 முதல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் அமல்படுத்தப்பட்டதற்கு பிறகு இவர்களது ஊதிய விகிதத்திற்கு இணையான அல்லது குறைவான ஊதிய விகிதங்களில் ஊதியம் பெற்று வந்த பல்வேறு பணித் தொகுதியினர் அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தை விட கூடுதலான ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் நிலைமை உருவானது. இதனால் அமைச்சுப் பணியாளரது கிடைமட்ட ஊதிய சமச்சீர் நிலைமை (Horizontal equilibrium) கடும் தாக்குதலுக்கு உள்ளானது. இந்தப் பின்னணியில் நடைபெற்ற போராட்டங்களின் விளைவாக 1.8.92 மற்றும் 1.9.98 தேதிகளில் தலா 5 விழுக்காடு தனி ஊதியம் வழங்கப்பட்டதேயன்றி இவர்களது பணிநிலைமைகளுக்கு பொருத்தமான ஊதிய ஏற்ற முறை வழங்கப்படவில்லை. இந்த ஊதிய மாற்றத்தின்போதும் இக்குறைபாடு களையப்படாததுடன் இவர்களது ஊதிய சமச்சீர் நிலைமை கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதானது ஏமாற்றமளிப்பதாக உள்ளது. எனவே, அமைச்சுப்பணியாளர்களின் கிடைமட்ட ஊதியச் சமநிலை பாதுகாக்கப்படக்கூடிய விதத்தில் ஊதியம் நிர்ணயிக்கப் படவேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

**தொழிற்நுட்ப ஊழியர்களுக்கு தொடர் அநீதி**

அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றிவரும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு அவர்களின் கல்வித்தகுதி மற்றும் தொழில்நுட்ப தகுதி ஆகியவற்றின் அடிப்படையில், தற்போதைய ஊதிய விகிதங்களில் PB1 ஏற்ற முறையில் ரூ.5200-20200 ஊதிய விகிதத்தில் ரூ.2800/- தர ஊதியத்தில் இவர்களது ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு, அதற்கு இணையான புதிய ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்கப்பட்டதும் அலுவலர் குழுவால் புறந்தள்ளப்பட்டுள்ளது. மேலும் தொழில்நுட்ப ஊழியர்கள் அனைவருக்கும் 10 விழுக்காடு ஆபத்துப்படி (Risk Allowance) வழங்கப்பட வேண்டும் எனவும் வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமலேயே விடப்பட்டுள்ளது துரதிருஷ்டவசமான தாகும். இக்குறைகளையும் களைந்திட ஜாக்டோ-ஜியோ வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## மாநகராட்சி/நகராட்சி மற்றும் பேரூராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்தல்

நகர்ப்புர உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியத்தை உத்தரவாதப்படுத்திடும் வகையில், அரசு கருவூலத்தின்மூலம் ஊதியம் வழங்கப்பட வேண்டும் எனவும், ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளதைப் போல் அவர்களையும் அரசு ஊழியர்களாக அறிவித்து, அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என வலிறுத்தப்பட்டதும் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து அவர்களின் மாதாந்திர ஊதியம் உரிய தேதியில் வழங்கப்படுவதை உத்திரவாதப்படுத்தும் வகையில் அரசு கருவூலம் மூலம் ஊதியம் வழங்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

## நிறைவாக

2006ஆம் ஆண்டு முதல் ஊதிய நிலுவை மற்றும் ஊதிய முரண்பாடுகள் சரி செய்யப்படுவதற்காக தொடர்ந்து போராடி வருகிறோம். இப் போராட்டங்கள் என்பவை ஊதிய மாற்றத்தின் அர்த்த அடர்த்தியுடன் ஊதியங்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் சட்டப்படியான உரிமைக்கான போராட்டங்களாகும். இந்திய அரசியலமைப்பு சட்டப்படி நியாய ஊதியங்களை அரசாங்கங்கள் வழங்காமல், அவற்றுக்குள் நுழைந்து நிலுவைகளை கொடுக்க மறுப்பதும், ஊதியங்களை குறைப்பதும் அநீதியான செயல்களாகும். நியாயப்படியான தேவைகளை, மறுக்காமல் கொடுக்கும் கடமையும் பொறுப்பும் அரசுகளுக்கு உண்டு. அதை விடுத்து, ஆட்சியாளர்களே அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அநீதிகள் இழைத்தால் போராட்டங்கள் தவிர்க்க இயலாததாக மாறும்.

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும். நெல் உயர குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான் என்ற ஔவை மூதுரையை அரசு நினைத்துப் பார்க்க வேண்டும். மக்கள் சுபிட்சமாக இருந்தால்தான் நாடு மட்டுமல்ல நாட்டை ஆள்பவர்களும் சுபிட்சமாக இருக்க முடியும். அரசின் நலத் திட்டங்களை முழுமையாக மக்களுக்கு கொண்டு சேர்க்கவும் மாணாக்கர்களுக்கு பண்பட்ட கல்வி, கலாச்சார, பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றை போதிக்கக்கவும் கூடிய அரசு ஊழியர்-ஆசிரியர்களின் ஊதிய மாற்றம் மேற்படி சுட்டப்பட்ட குறைகளை, முரண்களை களைந்து சீர்செய்திட அரசு முன்வரவேண்டும்.

அதிகாரவர்க்கமாய் அறியப்படும் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் போன்ற அதிகாரிகள் 1.1.2016 முதல் நிலுவை பாக்கியின்றி ஊதியம் பெற்று விட்ட நிலையிலும் மக்கள் பிரதிநிதிகளாய் இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள் முதல் கேபினட் அமைச்சர்கள் வரை 100 சதவீத சம்பள உயர்வு பெற்று விட்ட நிலையிலும் அரசு ஊழியர்-ஆசிரியர்களுக்கு ஊதியமாற்றம் அறிவிக்கப்பட்ட பின்பு ஊதிய மாற்றம் பெற்ற நீதியரசர்கள் கூட 1.1.2016 முதல் நிலுவைத்தொகையுடன் மத்திய அரசு அறிவித்துள்ள ஊதியமாற்றம் பெற்றுவிட்ட நிலையிலும் இவற்றையெல்லாம் ஏன் கொடுத்தீர்கள் என்று குதர்க்கம் பேசவில்லை. அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளவர்கள் 01.01.2016 முதல் நிலுவைத் தொகையுடன் மத்திய ஊதியக்குழு பரிந்துரைத்த ஊதியத்தினை பெறும் போது, அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? என்ற நியாயத்தையே கோர விரும்புகிறோம். ஆசிரியர்-அரசு ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டுள்ள நிலுவை மற்றும் நியாயமான ஊதியமாற்றத்திற்கு நியாயமான காரணம் ஒன்றுகூட கிடையாது என்பதை மீண்டும் ஒருமுறை சுட்ட விழைகிறோம். நிதி பற்றாக்குறை என்றால், நிதிச்சுமைக்கு முதலில் தோள் கொடுக்க வேண்டியவர்கள் ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் என்ற நிலையில், தங்களுக்கானதை எல்லாம் எடுத்துக்கொண்டு, ‘‘கஜானாவில் எதுவுமில்லை அதனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நிலுவைத் தொகையை கேட்கக்கூடாது’’ என்று சொல்வது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநீதி என்பதை தாங்கள் கவனத்திற்கு கொணர்ந்து, மறுக்கப்பட்டுள்ள 21 மாத ஊதிய மாற்ற நிலுவை மற்றும் ஊதிய முரண்களை களைந்த மத்திய அரசிற்கு இணையான ஊதியம் மற்றும் படிகள் ஆகியவற்றோடு சிறப்புகாலமுறை/தொகுப்பூதியம்/மதிப்பூதியம்/ஒப்பந்த ஊதியம் ஆகியமுறைகளை ஒழித்து வறையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். ■

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

பெறுநர் நாள் 15.12.2017

மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள்
புனித ஜார்ஜ் கோட்டை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

ஐயா,

பொருள் : ஓய்வூதியம் - அரசு ஊழியர்-ஆசிரியர்களின் ஓய்வூதியம் - 1.4.2003 முதல் பணியில் சேர்ந்தவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தை கைவிட்டு வரையறுக்கப்பட்ட பழைய ஓய்வூதியத்திட்டத்தினை அமலாக்கிட மாண்புமிகு முன்னாள் முதல்வர் சட்டமன்றத்தில் அளித்த வாக்குறுதியின்படி அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையினைப் பெற்று பழைய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தக் கோரல்

* * *

கடந்த 2011ம் ஆண்டு தேர்தலின்போது, மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் “அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் புதிய பென்சன் திட்டம் திரும்பப் பெறப்படும்'' என்று தேர்தல் அறிக்கையில் தெரிவித்தார். அரசு ஊழியர்கள்/ ஆசிரியர்களுக்கு அந்த வாக்குறுதி, நம்பிக்கை அளிப்பதாக இருந்ததால்தான் அம்மையார் அவர்களுக்கு ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் வாக்களித்தார்கள். ஆட்சிக்கு வந்த பிறகு மேற்படி கோரிக்கை குறித்து அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பலமுறை கோரிக்கை வைத்து வலியுறுத்தி வந்த நிலையில், கடந்த 2013ம் ஆண்டில், மத்திய அரசு, ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணைய மசோதாவினை (PFRDA Bill) நாடாளுமன்றத்தில் சட்டமாக்க வாக்கெடுப்பு நடத்தியபோது, ஆளும் அ.இ.அ.தி.மு.க வின் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய முதல்வரின் ஆணைக்கிணங்க அம்மசோதாவினை எதிர்த்து வாக்களித்து புதிய பென்சன் திட்டத்திற்கு எதிராக பதிவு செய்தனர். இதன்மூலம் அரசு ஊழியர் - ஆசிரியர்கள் மத்தியில் பெரும் நம்பிக்கை விதைக்கப்பட்டு புதிய ஓய்வூதியத் திட்டம் தமிழகத்தில் முழுமையாக கைவிடப்படும் என்ற நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது.

ஆனாலும், புதிய ஓய்வூதியத்திட்டம் கைவிடப்படாத நிலையில், கடந்த 2016ல் அரசு ஊழியர்கள்- ஆசிரியர்கள் புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தத்தைத் மேற்கொண்ட பின்னர், அப்போது நடந்து கொண்டிருந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக வெளியிட்டார். அவற்றில் ஒன்றுதான் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க வல்லுநர் குழு அமைக்கப்படும் என்றும், அது பழைய ஓய்வூதியத்தினை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யும் என்றும் அந்த அறிக்கையின் பேரில் அரசு முடிவெடுக்கும் என்றும் தெரிவித்திருந்ததாகும்.

அவ்வறிவிப்பின் அடிப்படையில், திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை

ஆராய்வதாகக் கூறி நான்கு முறை கால அளவு நீட்டிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மறைவுக்குப் பின்னர் அது என்ன ஆனது என்று தெரியாமலேயே கைவிடப்பட்டு, பிறகு மீண்டும் ஜாக்டோ-ஜியோ போராட்டக் களம் கண்டபிறகு, டாக்டர் ட்டி.எஸ். ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் தலைமையில் ஒருநபர் வல்லுநர் குழுவாக மாற்றப்பட்டு, நவம்பர் 2017க்குள் அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டது. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிக்க ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, ஒரு வருட காலத்திற்கும் மேலாக அதை பரிசீலித்து அறிக்கை அளிக்காததிலிருந்து அரசு அளிக்கும் வாக்குறுதிகளின் நம்பகத்தன்மை குறித்து சாமானிய அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம் ஊகத்தின் அடிப்படையிலானது அன்று.

ஏற்கெனவே அமைக்கப்பட்ட திருமதி.சாந்தா ஷீலா நாயர் அவர்கள் தலைமையிலான வல்லுநர் குழு மீண்டும் மீண்டும் காரணங்கள் ஏதும் உரைக்கப்படாமல் நான்கு முறை நீட்டிக்கப்பட்டதையும், நான்காவது முறையாக அதன் காலக்கெடு முடிந்தபிறகு மேலும் நீட்டிக்கப்படாமல் விடப்பட்டதையும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராட்டக் களத்திற்கு தள்ளப்பட்ட பின்னர் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் மீண்டும் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அது நவம்பர் 2017க்குள் அறிக்கையை அளிக்கும் என அறிவித்தபோதே, ஜாக்டோ-ஜியோவின் அனுபவ பின்புலத்தில் அரசின் நம்பகத்தன்மை குறித்து வினா எழுப்பியது.

இந்நிலையில், கடந்த வேலைநிறுத்தப்போராட்டத்தின் போது தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கின் விசாரணையில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அரசு ஊழியர்-ஆசிரியர்களின் கோரிக்கை நியாயங்களை அழுத்தமாக வலியுறுத்தியதன் காரணமாக, அரசு வழக்குரைஞர், பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அமைக்கப்பட்டுள்ள குழு, நவம்பர் 30, 2017- க்குள் அறிக்கையை நிச்சயம் தாக்கல் செய்யும் என்றும் அந்த அறிக்கையின் பேரில் அரசு, உரிய முடிவை விரைந்து எடுக்கும் எனவும் தெரிவித்தார். அதனை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையும் தனது இடைக்கால உத்தரவில் பதிவு செய்தது.


இருப்பினும் 30.11.2017 அன்று ஸ்ரீதர் குழுவின் அறிக்கை அரசுக்கு தாக்கல் செய்யப்படும் என அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் காத்திருந்த நிலையில் டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவும் அறிக்கை எதுவும் தாக்கல் செய்ததாக அரசுத் தரப்பிலிருந்து செய்திகள் எதுவும் வரவில்லை.

டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) தலைமையிலான வல்லுநர் குழு அமைத்தது தொடர்பான அரசு செய்திக் குறிப்பில் மேற்கண்ட குழுவானது "மத்திய அரசு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை (PFRDA) மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய 21.10.2016 அன்று ஒரு குழுவை அமைத்தது, இந்தக் குழுவின் பரிந்துரைகளையும் பரிசீலித்து வல்லுநர் குழு அறிக்கை தரும்'' என்ற ஒரு புதிய அறிவிப்பையும் சேர்த்திருந்தது. இந்த அறிவிப்பு இதுவரையில் இல்லாமல் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அரசு ஊழியர்-ஆசிரியர்களுக்கு அரசின் அறிவிப்பு குறித்த சந்தேகம் எழுந்தது. நடைமுறையில் உள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவது என்றால், இந்த புதிய பென்சன் திட்டம் தொடரப் போகிறது என்பதான அர்த்தத்தை அந்த அறிவிப்பு கொண்டுள்ளதாகத் தோன்ற, ஈரோட்டில் முதல்வருடனான சந்திப்பின்போது ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் முதல்வரிடம் தமது அச்சங்களை வெளியிட்டபோது அரசின் அறிவிப்பில் அங்ஙனம் வந்துள்ளது குறித்து தனது வருத்தத்தினை பதிவுசெய்தார்.

இந்நிலையில், மேற்படி குழுவின் காலவரம்பு கடந்த 30.11.2017 அன்றே காலாவதியாகிவிட்ட நிலையில், மறைந்த முன்னாள் முதல்வர் 2011 முதல் தொடர்ச்சியாக அளித்த வாக்குறுதி, அளித்த நம்பிக்கைகள், எடுத்த நம்பிக்கைக்குரிய நடவடிக்கைகள் அவரின் மறைவிற்கு பின்னர் நீர்த்துபோன நிலையில், தற்போதைய அரசும் மாண்புமிகு முதல்வரும் அரசு ஊழியர்-ஆசிரியர்களின் ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று பேச்சுவார்த்தையிலும் அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்திலும் வாக்களித்ததன்படி திரு ஸ்ரீதர் அவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஒருநபர் வல்லுநர் குழுவின் அறிக்கையினை உடனடியாகப்பெற்று புதிய ஓய்வூதியத் திட்டத்தினை திரும்பப் பெற்று பழைய ஓய்வூதியத்திட்டத்தினைஅமலாக்கிட வேண்டும் என்று ஜாக்டோ-ஜியோ வலியுறுத்திக் கேட்டுக்கெள்கிறது. ■

# தற்காலிக ஊழியரிலிருந்து...தன்னிகரற்ற தலைவராய்...

**80** வயதில் அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் மூத்த தலைவர் என்.எம்.சுந்தரம் மறைவெய்தியிருக்கிறார். 60 ஆண்டு பொது வாழ்க்கையில் அயராது, தளராது ஓடிய அவரது கால்கள் இன்று ஓய்வெடுத்துக் கொண்டுள்ளன. இந்தியாவில் அவர் பாதங்கள் பதியாத இடங்களே இல்லை. அவரது நீண்ட நெடிய பயணத்தின் பெரும் தடங்கள் எதிர் காலத்திற்கான திசைவழியைக் காண்பிப்பதாக உள்ளன. 1957இல் எல்.ஐ.சியில் தற்காலிக ஊழியராக அடியெடுத்து வைத்தவர். அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கம் தோன்றி ஆறு ஆண்டுகளும், ஆயுள் இன்சூரன்ஸ் தேசிய மயமாக்கப் பட்டு ஓராண்டுமே ஆகியிருந்த காலம் அது. நிர்வாகத்தின் அடக்கு முறைகளுக்கு மத்தியில் சங்கம் தனது அஸ்திவாரக் கற்களை ஒவ்வொன்றாக அடுக்கிக் கொண் டிருந்த சூழல் அது. சவால்கள் எழும் போதெல்லாம் அதனைச் சந்திப்பதற்கான மனிதர்களும் சேர்ந்தே உருவாகிறார்கள். என்.எம்.சுந்தரம் பணியில் சேர்ந்த ஓராண்டிலேயே கிளைச் சங்க செய லாளராகத் தேர்வு செய்யப்படுகிறார். அன்று துவங்கிய பயணம் 1961 இல் தென் மண்டல இணைச் செயலாளராக - 1963இல் தென் மண்டலப் பொதுச் செயலாளராக - 1988இல் அகில இந்தியப் பொதுச் செயலாளராக - 2002இல் அகில இந்தியத் தலைவராக அவர் எடுத்த விஸ்வரூபம் அவரது உழைப்பிற்கு, அறிவாற் றலுக்கு, அர்ப்பணிப்பிற்கு சாட்சியங்களாகும்.



### விரிந்த பார்வை...

தொழிலாளர்களை ஊதியத்திற்காக, பொருளாதாரப் பயன்களுக்காக திரட்டுகிற போது அக்கோரிக்கைகளின் பின்புலமாக உள்ள அரசியலை, அதன் வலைப் பின்னலை அவர்களை உள்வாங்கச் செய்வது அவசியம் என்ற ஆழமான கருத்து கொண்டவர் அவர். அவரது ஒவ்வொரு உரையிலும் இக்கவனம் இருக்கும். அதன் பிரதிபலிப்பு இருக்கும்.1963 மதுரையில் நடைபெற்ற தென்மண்டல இன்சூரன்ஸ் ஊழியர் கூட்டமைப்பின் மாநாட்டிற்கான அறிக்கையை அவர்தான் எழுதியிருந்தார். அப்போதெல்லாம் சர்வதேச, தேசிய அரசியல் அறிக்கைகளில் இடம் பெறாத காலம். தொழிலாளர்களின் ஊதியம் பெறுவதற்கான போராட்டம், அந்த ஊதியத்தின் உண்மை மதிப்பைப் பாதுகாப்பதற்கான போராட் டமாகவும் விரிவடைய வேண்டுமென்ற கருத்தை அதில் வலியுறுத்தியிருந்தார். முதலாளித்துவ சமூகத்தில் பணவீக்கம் என்பது எவ்வாறு தொழிலாளர்கள் போராடிப் பெறுகிற ஊதியத்தை மீண்டும் பறிக்கிற ஆயுதமாகப் பயன்படுத்தப் படுகிறது எனச் சுட்டிக்காட்டி இருந்தார். மாநாட்டுப் பிரதிநிதிகளில் பலர் இது நமக்குத் தேவையில்லாத அரசியல் என எதிர்ப்பு தெரிவித்தனர். மாநாட்டில் பங்கேற்றிருந்த மோகன் குமார மங்கலம் தலையிட்டு என்.எம். சுந்தரத்தைப் பாராட்டி இப்படிப் பட்ட விரிந்த பார்வை தொழிற்சங்க இயக்கத்திற்கு தேவை என பிரதிநிதி களுக்கு அறிவுறுத்தினார். இம் மாநாட்டில் தான் 25 வயதே ஆன என்.எம்.சுந்தரம் நான்கு தென் மாநிலங்களுக்கான சங்கப் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப் பட்டார்.

### அறிவார்ந்த தலைமை...

என்.எம்.சுந்தரம் அரசியல், பொருளாதாரம், சமூகம் சார்ந்த கருது கோள்களில் ஆழமான ஞானம் கொண்டவராகத் திகழ்ந்தார். அதன் காரணமாக புறச் சூழல்களில் ஏற்படுகிற அபாயங்களுக்கு எதிராக இன்சூரன்ஸ் ஊழியர் களை கருத்திலும், களத்திலும் ஒன்றுபடுத்து வதில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. 1994இல் இன்சூரன்ஸ் துறை 'சீர்திருத்தங்களுக்கான' மல்ஹோத்ரா குழு அறிக்கை வெளிவந்திருந்தது. உலகமயமாக்கல் குறித்த பிரமைகளும், மயக்கங்களும் நடுத்தர வர்க்கத்திடம் பெருமளவு இருந்த நேரம் அது. மறுபுறத்தில் இப்பரிந்துரைகள் அமலானால் தங்களின் வாழ்நிலை, முன்னேற்றம் என்ன ஆகுமோ என்கிற அச்சம் இன்சூரன்ஸ் ஊழியர்



**தோழர் என்.எம்.எஸ். அவர்களின் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகள்**

களுக்கும் ஏற்பட்ட சூழல் அது. பொதுவாக தொழிற்சங்க இயக்கங்கள், ஊழியர்களின் அச்சத்தை முன்வைத்தே அப்பிரச்சனைகளின்பால் அணி திரட்டுவது நடக்கும். ஆனால் என்.எம்.சுந்தரம் இந்திய நாட்டின் நிர்மாணப் பணிகள், ஆதாரத் தொழில் வளர்ச்சி, கடைசி மனிதனுக்கும் காப்பீடு கிட்டுதல் ஆகியவற்றுக்கு இன்சூரன்ஸ் தொழில் அரசின் வசமே ஏன் இருக்க வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு எதிர்வினைகள் அமைய வேண்டும் என வழிகாட்டினார்.ஒரு ஊடக விவாதத்தில் அவ்வறிக்கையைச் சமர்ப்பித்த முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னர் ஆர்.என்.மல்ஹோத்ராவுடன் பங்கேற்றுப் பேசினார் என்.எம்.சுந்தரம். அப்போது, இந்தியா போன்ற வளர்முக நாட்டின் வளர்ச்சிக்கு எல்.ஐ.சி அளித்து வரும் பெரும் நிதியாதாரங்களையும், தேசிய மயத்திற்கு பின்பு எல்.ஐ.சியும், அரசு பொது இன்சூரன்ஸ் நிறுவனங்களும் சாதாரண மக்களுக்கும் காப்பீடு பயன்களைக் கொண்டு போய்ச் சேர்த்திருப்பதை யும் எடுத்துரைத்து இன்சூரன்ஸ் துறை அரசின் 'இயல்பான ஏக போகமாக' (NATURAL MONOPOLY) இருக்க வேண்டும்' எனக் கூறினார். உடனே ஆர்.என். மல்ஹோத்ரா 'பொருளா தாரத்தில் இயல்பான ஏக போகம் என்கிற கருதுகோளை நான் எங்கேயுமே கேள்விப்பட்ட தில்லை' என்றார். என்.எம்.சுந்தரம் சற்றும் தாமதிக்காமல் 'இதை நூலகங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பொருளாதாரப் புத்தகங்களில் தேடாதீர்கள்! கிராமங்களுக்கு வாருங்கள்... குடிசைகளுக்கு வாருங்கள்... அங்கு தேடுங்கள்... இக் கருது கோளுக்கான அர்த்தம் உங்களுக்கு தெரியும்' என்று பதில் கூறினார்.

### மாரீச மான்கள்...

உலகமயப்பாதை அமலாவதற்கு 'நுகர்வோர் நலன்' என்கிற மாரீச மான் உலவ விடப்பட்டது. ஒவ்வோர் துறையின் ஊழியர்களுக்கு எதிராக மக்களை முன்னிறுத்துவதும், ஒரு துறை ஊழியர்களே பிற துறை சீர்திருத்தங்களை ஏற்கச் செய்வதுமான உத்தியே அது.ஒரு முறை என்.எம்.சுந்தரம் ஓர் கலந்துரையாடலில் பங்கேற்றார். அதில் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர். திட்டக் கமிஷன் துணைத் தலைவராக இருந்த மாண்டேக்சிங் அலுவாலி யாவும் அதில் இருந்தார். நுகர்வோர் அமைப்புகளுக்கான நேரத்தில் வங்கித் தொழி லாளர்கள் மீது ஒருவர் கடும் விமர்சனங்களை முன் வைத்தார். அவர் பேசி முடித்தவுடன் என்.எம்.சுந்தரம் எழுந்து பேசியவுடன் ' எங்களுக்கான நேரத்தில் நீங்கள் பேசக்கூடாது ' என்று அந்த நுகர்வோர் பிரதிநிதி ஆட்சேபித்தார். சுந்தரம் நுகர்வோர் பிரதிநிதியைப் பார்த்து நீங்கள் எவ்வளவு நுகர்வோரை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். அவர் 30000 என்று பதில் சொன்னார். உடனே என்.எம்.சுந்தரம் என்னுடைய சங்கத்தின்

உறுப்பினர்களில் 80,000 வங்கி வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள் என்று கூறிவிட்டு வராக்கடன் உள்ளிட்டு வங்கிகள் சந்திக்கிற பரந்த அளவிலான அபாயங்களைப் பேசினார். உலகமயத்தின் மாய அம்புகளைக் களத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பதைக் கற்பித்த உதாரணங்களில் ஒன்று அது. ஆனால் நுகர்வோர் சேவை என்பது தொழிற்சங்க இயக்கங்களின் ஆயுதமாக மாறவேண்டுமென்பதி லும் அவர் தெளிவாக இருந்தார். "தனியார்மய எதிர்ப்பு போராட்டம் உங்கள் மேசைகளிலிருந்து துவங்க வேண்டும்" என்று அவர் இன்சூரன்ஸ் ஊழியர்களுக்கு விடுத்த வேண்டுகோள் மிகத் துணிச்சலானது. பணிக் கலாச்சாரம் பற்றிய விவாதங்களை அது ஊழியர்கள் மத்தியில் உருவாக்கியது.இன்சூரன்ஸ் தனியார்மயத்திற்கு எதிராக மக்கள் கருத்தைத் திரட்டுவதற்காக அவர் வகுத்த வியூகங்களும் முக்கியமானவை. 1995லும் 1999லும் நடத்தப்பட்ட இரண்டு கையெழுத்தியக் கங்கள் மக்களோடு உரையாடல்களாக மாறின. முதல் இயக்கத்தில் 65 லட்சம், இரண்டாவது இயக்கத்தில் ஒன்றரைக் கோடி கையெழுத்துக்கள் திரட்டப்பட்டன. இது மக்கள் கருத்தை அந்நிய முதலீடு, தனியார்மயத்திற்கு எதிராக உருவாக்கிய தோடு மட்டுமின்றி மக்களுக்கான கட்டுப் பாட்டை ஊழியர்கள் மனதிலும் பதியச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## தொலைநோக்கு...

சோதனைகளும், சவால்களும் நிறைந்த காலகட்டத்தில்தான் தலைமையின் பாத்திரம் முக்கியமானது. 1994ல் சமர்ப்பிக்கப்பட்ட மல்ஹோத்ரா அறிக்கை அமலாகியிருந்தால் அந்நிய மூலதனத்திற்கு இன்று விதிக்கப்பட்டுள்ள 49 சதவீதம் என்ற வரம்பு கூட இருந்திருக்காது. எல்ஐசி மற்றும் அரசுப் பொது இன்சூரன்ஸ் நிறுவனங்களின் அரசுப் பங்குகளில் 50 சதவீதத்தை விற்க வேண்டுமென்ற பரிந்துரையும் அமலாகி இருந்தால் 'அரசு' என்ற அந்தஸ்தையும் அந்நிறுவனங்கள் இழந்திருக்கும்.அதற்கெதிரான போராட்ட வியூகத்தை வகுத்ததில் என்.எம். சுந்தரத்தின் பங்களிப்பு மகத்தானது. மக்கள் கருத்தைத் திரட்டுகிற இடையறாத இயக்கங்கள், அரசியல் கட்சிகள் மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துகிற முயற்சிகள், இடதுசாரிக்கட்சிகள் வாயிலாக நாடாளுமன்றத்திற்குள் நடத்திய கருத்துப்போர், ஆளும் வர்க்கங்களின் முரண் பாடுகளை கையாளுதல், நவீன தொழில்நுட்பம் குறித்த ஆக்கப்பூர்வமான அணுகுமுறையோடு போட்டியை எதிர்கொள்ள அரசு இன்சூரன்ஸ் நிறுவனங்களைத் தயார் செய்தல் என பன்முனை வியூகங்கள் உருவானதில் அவரது அறிவார்ந்த வழிகாட்டல்கள் இருந்தன.1999ல் இன்சூரன்ஸ் கட்டுப்பாட்டு ஆணைய மசோதா நிறைவேறிய போது பெரும் மனச்சோர்வு ஊழியர்களிடம் ஏற்பட்டபோது "ஐஆர்டிஏ முடிவல்ல... அது மறு துவக்கம்" என்ற அவர் விடுத்த அறைகூவல் வெறும் சொற்ஜாலம் அல்ல. எதிர்காலத்திற்கான திசைவழி! இன்று வரை உலகமயத்தின் ஒவ்வோர் நகர்வுக்கும் எதிராக போராட்டங்கள் தொடர் வதால் ஆள்வோர்களின் நிகழ்ச்சி நிரல் அவ்வளவு எளிதாக ஈடேற முடியவில்லை. 23 தனியார் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் களத்தில் மோதும் போதும் எல்ஐசியின் சந்தைப்பங்கு 72 சதவீதமாக இருப்பதற்கு இப்போராட்டங்கள் மிக முக்கியக் காரணம்.

## ஒற்றுமையே தாரக மந்திரம்...

பாபர் மசூதி இடிப்பு அரங்கேறிய நேரத்தில் தொழிலாளர்கள் ஒற்றுமையும் கேள்விக்கு உள்ளானது. பாபர் மசூதி இடிப்பிற்கு எதிராக அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கம் சுற்றறிக்கை விடுத்த போது இந்தியாவிலுள்ள 100 கோட்டங்களில் ஒன்றான வதோதரா கோட்டச் சங்கம் அச்சுற்றறிக்கையைத் திரும்பப் பெறா விட்டால் சங்கத்தை விட்டு வெளியேறுவோமென அச்சுறுத்தியது. அப்போது என்.எம். சுந்தரம் தலைமையிலான அகில இந்தியச் சங்கம் சற்றும் பின்வாங்கவில்லை. "கொள்கை நிலையிலிருந்து பின்வாங்கினால் எதிர்காலமே கேள்விக்குறி யாகும். அதற்கு நிகழ்காலச் சவால்களை எதிர்கொள்வதே சரியான வழிமுறையாகும்" என்றார் என்.எம்.சுந்தரம். அக்கோட்டத்தில் பெரும்பாலான ஊழியர்கள் வெளியேறினர். ஆனால் தொடர்ந்த கருத்துருவாக்கம், உரை யாடல்கள் மூலமாக தவறாக வழிநடத்தப்பட்ட ஊழியர்கள் மீண்டும் திரும்பி வந்தனர். காலிஸ்தான் பிரச்சனையின் போதும் பஞ்சாப்பிற்கு சென்று தொழிற்சங்கக் கூட்டங்களை நடத்தியவர். மண்டல் குழு அமலாக்கத்தின் போது சமூக நீதிக்கு ஆதரவான கருத்தை சங்க மாநாடுகளில் அழுத்தமாகப் பேசியவர்.

## ஊழியர்களின் உரிமை காக்க...

அகில இந்திய மாநாடுகளில் தோழர் சுந்தரம் பேசுகிறாரென்றால் சபையில் அமைதி நிலவும். ஆழ்ந்த கவனத்தோடு அனைவரும் செவி

மடுப்பார்கள். ஊதிய உயர்வுப் போராட்டங்களில் ஊழியர்களின் உணர்வுகளை ஒருங்கிணைப்பதில், நம்பிக்கையூட்டுவதில், போராட்ட வடிவங்களை நேர்த்தியாக வகுப்பதில் அவருக்கு நிகர் அவரே. பென்சனுக்கான போராட்டத்தில் வங்கி, இன்சூரன்ஸ் சங்கங்களை கூட்டு இயக்கத்திற்குள் கொண்டு வந்ததிலும், அப்பயனை ஈட்டித் தந்ததிலும் அவரது பங்களிப்பு மறக்க இயலாதது. இன்று விழிநீரோடு ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அவருக்கு விடை கொடுப்பதற்கு காரணம் அவர்களின் முகங்களில் சிரிப்பையும், நெஞ்சங் களில் சுய மரியாதையையும் ஏற்படுத்தியவர் என்பதே.

### மகளிரை முன்னிறுத்தியவர்...

சங்கத்தின் பணிகளில் மகளிர் ஊழியர்களை முன்னிறுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்திய தலைவர் அவர். 30 ஆண்டுகளுக்கு முன்பே சங்கத்தில் மகளிர் துணை அமைப்புகளை உருவாக்கி, மகளிர் மாநாடுகளை நடத்தியவர், தொழிற்சங்கத்தில் பாலின சமத்துவத்தை உரத்துப் பேசியவர் அவர்.

### தன்னிகரில்லா தலைவர்....

துவக்க காலங்களில் பதிவு செய்யப்படாத இரயில் பெட்டிகளில் பல இரவுகள் தூக்கமின்றிப் பயணித்தவர். 1970களில் சமரச எண்ணம் கொண்ட பிரிவினரால் தாக்குதலுக்குள்ளாகி பெரும் காயங்களுக்கு ஆளானவர். எமர்ஜென்சி காலங்களில் உறுதியோடு இடதுசாரி, தொழிற் சங்கத் தலைவர்களைப் பாதுகாப்பதில் முன்னின் றவர். தனிநபர் முன்னேற்றம் குறித்த இளமைக் கால கனவுகளை விட பொதுநலன் முக்கியம் என்ற இலட்சியத்திற்காக பி.டி.இரணதிவே, சுனில் மைத்ரா, பி.ராமமுர்த்தி, வி.பி.சிந்தன் போன்ற தலைவர்களால் ஈர்க்கப்பட்டவர். சந்திர சேகர போஸ், சரோஜ் சவுத்ரி போன்ற மகத்தான ஆளுமைகளுக்கு இணையாகச் செயலாற்றி அனைத்திந்தியச் சங்கத்தின் தலைமையகத்தையே சென்னைக்கு கொண்டு வந்தவர். எல்லாவற் றிற்கும் மேலாக அவரது தன்னடக்கமும், தலைமைக்கு புதியவர்களை வார்த்தெடுத்த பண்பும் சிறந்த முன்னுதாரணங்கள் ஆகும். கே.என்.கோபால கிருஷ்ணன், எஸ்.இராஜப்பா, கே.நடராஜன், ஆர்.கோவிந்தராஜன் போன்றோர் இல்லாவிட்டால் எனக்கு என்ன தனித்த பெருமை என்பார். அப்படியொரு கூட்டுத் தலைமைக்கே வெற்றிகளை உரித்தாக்கியவர். எனினும் அவரது தனிநபர் பாத்திரம் மிக மகத்தானது.அவரது துணைவியார் புனிதா, அவரது பொது வாழ்க்கைக்கு பெரும் தூணாக இறுதிவரை நின்றிருக்கிறார். இப்படி ஒரு வார்த்தையில் அக்குடும்பத்தின் பங்கைச் சொல்லிவிட்டுக் கடந்து செல்ல முடியாது.என்.எம்.எஸ் என்ற மூன்றெழுத் துகள் இந்திய நாட்டின் இன்சூரன்ஸ் தொழிற்சங்க இயக்கத்திற்கு மட்டுமின்றி எல்லா உழைப்பாளி இயக்கங்களுக்கும் எழுச்சியூட்டுபவையாக அமைந்துள்ளன. அவரின் குரல் காற்றின் ஊடாய்ப் பரவி என்றென்றும், செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

நன்றி : தீக்கதிர்

---

## விடை

சுவாசம் நிறுத்தலில்
வாசம் சவமாகிறது

ஓயாத அழுகையில்
ஓய்கிறது
குழந்தையின் கோரிக்கை

குருதியோட்டம் தொடர்தலில்
உறுதியாகிறது மானுட ஓட்டம்

கோள்களின் இயக்கம்
ஆள்கிறது அண்டம்

இடையறாத உரிமைப் போரின்
இடைநிறுத்தலில்
தடையாகிறது உரிமை
படையெடுத்தலில்
உடையும் தடை
திறக்கும் மடை
பிறக்கும் விடை

## துளிப்பா

வழக்குமொழி புரியாதது
வழக்குநிலை அறியாதது
மக்கள் உரிமை பறிப்பானது
தாய்மொழி விவாதம்
அனுமதிக்காத பேதம்
சுதந்திர தாகம்
நீதிதேவதையின் கண்கட்டு
தாய்மொழிக்கு வாய்ப்பூட்டு
சேய் அகற்று போரிட்டு

**- பெரணமல்லூர் சேகரன்**

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்ட/பகுதி பேரவைகள்

## வடசென்னை

***அம்பத்தூர்-ஆவடி*** பகுதிக் குழுவின் கூட்டம் 9.12.2017 அன்று ஆவடி நகராட்சி சமூக நலக் கூடத்தில் நடைபெற்றது. சங்கக் கொடியை பகுதி தலைவர் எஸ்.லோகநாதனும், சம்மேளனக் கொடியை மாவட்டத் தலைவர் ம.அந்தோணி சாமியும் ஏற்றி வைத்தனர். மாவட்ட இணைச் செயலாளர் வி.விஜயகுமார் துவக்கவுரை யாற்றினார். செயலாளர் அறிக்கையை வெங்கட கிருஷ்ணனும், நிதிநிலை அறிக்கையை ஜி.வேலுவும் முன்வைத்தனர். பி.வாசுகி, வி.பொன்ராஜ் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். ஐடிஐ சங்கத்தின் என்.ரமேஷ், மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி, மாவட்ட துணைத் தலைவர் பி.சுந்தரம்மாள், காவல் அடிப்படை ஊழியர் சங்கத்தின் ஐடா அர்ஜினிபாய், மாநகராட்சி சத்துணவு ஊழியர் சங்கத்தின் சுமதி, ஐசிடிஎஸ் சங்கத்தின் உஷாராணி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட துணைத் தலைவர் பி.பத்மநாபன் நிறைவுரையாற்றினார். இணைச் செயலாளர் எம்.சந்தானம் நன்றி கூறினார்.

***தங்கசாலை*** பகுதிக் குழுவின் கூட்டம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. சங்கக் கொடியை தலைவர் கு.சாதிக்பாட்சாவும், சம்மேளனக் கொடியினை மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபியும் ஏற்றி வைத்தனர். இணைச் செயலாளர் பாலாஜி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணைச் செயலாளர் ஜெ.சரஸ்வதி துவக்கி வைத்தார். செயலாளர் மு.விவேகானந்தன் வேலை அறிக்கையினையும், ஜி.மகேந்திரன் நிதிநிலை அறிக்கையினையும் முன்வைத்தனர். பகுதி நிர்வாகிகள் தேவிகா, திருமகள், சி.லட்சுமணன், தாமோதரன், வி.வேல்பாண்டி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். துறைவாரி சங்க நிர்வாகிகள் ராமலிங்கம், சித்ரா, கே.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.பாபு, பாபு, டி.புருஷோத்தமன், ஏ.குப்பம்மாள், ந.செல்வம், ச.மாதவன், ஜி.வெங்கடேசன், எம்.ராமு ஆகியோர் வாழ்த்தி பேசினர். காலியாக இருந்த பதவிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் பகுதி இணைச் செயலாளராக அஜய்ராஜ், துணைத் தலைவராக கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட இணைச் செயலாளர் வி.விஜயகுமரன் நிறைவுரையாற்றினார். பகுதி துணைத் தலைவர் ஆர்.ஜெய்கணேஷ் நன்றி கூறினார்.

***குறளகம்*** பகுதிக் குழு பேரவைக் கூட்டம் 28.12.2017 அன்று பாரிமுனையில் உள்ள பிஎஸ்என்எல் ஊழியர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. சங்கக் கொடியினை தலைவர் பத்மா ஏற்றி வைத்தார். சம்மேளனக் கொடியினை மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி ஏற்றி வைத்தார். சுந்தரமூர்த்தி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத் தலைவர் டி.குணசேகரன் துவக்கி வைத்தார். த.ஏழுமலை வேலை அறிக்கையினையும், ஆ.கோபிநாதன் நிதிநிலை அறிக்கையினையும் முன்வைத்தனர். கே.செல்வராணி, வேல்முருகன், ராஜா, சுந்தர மூர்த்தி ஆகிய பகுதி நிர்வாகிகள் தீர்மானங்களை முன்மொழிந்தனர். காலியாக இருந்த இணைச் செயலாளர் பொறுப்புக்கு மணிகண்டன் தேர்வு செய்யப்பட்டார். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி மற்றும் இணைச் செயலாளர் ப.சுந்தரம்மாள் கருத்துரையாற்றினர். மாவட்டத் தலைவர் ப.அந்தோணிசாமி நிறைவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் என்.சங்கர், ராம்குமார், தேவிகா ஆகியோர் வாழ்த்தி பேசினர். பகுதி துணைத் தலைவர் டேனியல் சத்தியராஜ் நன்றி கூறினார்.

## காஞ்சிபுரம்

**திருக்கழுகுன்றத்தின்** வட்டப் பேரவைக் கூட்டம் கடந்த 25.11.2017 அன்று வட்டத் தலைவர் டி.கன்னியப்பன் தலைமையில் நடைபெற்றறது. சங்கத்தின் கொடியினை மாவட்ட பொருளாளர பி.இராமமூர்த்தி ஏற்றி வைத்தார். துணைத் தலைவர் ஜி.பூபதி வரவேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் கே.பூங்குழலி பேரவையை துவக்கி வைத்து பேசினார். வேலை அறிக்கையை செயலாளர் வி.கங்காதரனும், நிதிநிலை அறிக்கையை பொருளாளர் கே.ஜனார்த்தனமும் முன் வைத்தனர். கோரிக்கை மற்றும் பொதுத் தீர்மானங்களை என்.லட்சு மணன், கே.சந்திரன், சுந்தரி, ஜெ.தேவதாஸ், வேதராமானுஜம், எஸ்.பிரபாகரன் ஆகியோர் முன்மொழிந்தனர். முன்னாள் தலைவர்கள்

ஜெ.செல்வன், டி.மூர்த்தி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் கே.பெருமாள் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கோவிந்தன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் பி.இராமமூர்த்தி நிறைவுரையாற்றினார். இணைச் செயலாளர் யாசின் நன்றி கூறினார். பேரவையில் ஏராளமான பெண் ஊழியர்கள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

### நாகப்பட்டினம்

**நாகப்பட்டினம்** வட்டப் பேரவை நாகை அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் 09.12.17 அன்று வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. வட்ட இணைச் செயலாளர் என்.அமுதா அஞ்சலி உரை வாசித்தார். மாவட்டத் துணைத் தலைவர் அ.சௌந்தரபாண்டியன் துவக்கவுரையாற்றினார்.

வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். வட்டப் பொருளாளர் எம்.மேகநாதன் வரவு-செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பின்னர் அறிக்கைகள் ஏற்கப்பட்டன.

பி.செல்வராஜ் (சிஐடியு), முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சு.மணி, துறைவாரி சங்க நிர்வாகிகள் என்.பாபுராஜ், சி.வாசு, எஸ்.கணேசன், சி.கலியபெருமாள், ஆர்.தங்கவேலு, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட இணைச் செயலாளர்கள் கே.ராஜீ, ஆர்.கலா, து.இளவரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.புஷ்பநாதன் "அடிமைத் தளை அறுப்போம்" என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்.

வட்ட இணைச் செயலாளர் பி.ரமேஷ் தீர்மானங்களை முன்மொழிந்தார். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார். இறுதியாக வட்ட இணைச் செயலாளர் ட்டி.சசிகலா நன்றி கூறினார்.




### திருச்சி

**திருச்சி** வட்ட பேரவை ஹோட்டல் ராஜாவில் வட்டக் கிளை தலைவர் வெ.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தோழர் ராஜமாணிக்கம் அஞ்சலி தீர்மானம் வாசிக்கப் பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் வட்டக் கிளை இணைச் செயலாளர் தோழர் ராஜ்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். வட்டக் கிளை பேரவையை முறையாக தொடங்கி வைத்து துவக்க உரை நிகழ்த்தினார் மாவட்ட தலைவர் விவேகானந்தன். வட்டக்கிளை தலைவர் சொக்கலிங்கம் தலைமை உரையாற்றினார். முனைவர் கா.பால்பாண்டி வேலை அறிக்கை யினையும், சுந்தர்ராஜன் நிதிநிலை அறிக்கை யினையும் தாக்கல் செய்தனர்.

பின்பு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப் பட்டனர். மாவட்ட செயலாளர் கென்னடி நிறைவுரையாற்றினார். இறுதியாக தோழர் ராஜமாணிக்கம் நன்றி கூறினார்.

புதிய நிர்வாகிகளாக தலைவராக வி.சொக்க லிங்கம், துணைத் தலைவர்களாக வி.சுப்பிர மணியன், வி.ரேவதி, எம்.ராஜ்குமார், வட்டச் செயலாளராக முனைவர் கா.பால்பாண்டி, இணைச் செயலாளர்களாக வி.ராஜமாணிக்கம், க.சக்திவேல், அருள்பிரகாசம், க.விக்னேஷ், பொருளாளராக டி.செல்வராஜ், மாவட்ட செயற்குழு உறுப்பினர்களாக சுரேஷ் பிரபு மற்றும் ரத்தினகிரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### தஞ்சாவூர்

கும்பகோணம் வட்டக் கிளையின் 12வது பேரவைக் கூட்டம் 27.12.2017 அன்று வி.கே.திருமண மண்டபத்தில் வட்டத் தலைவர் ஜி.கண்ணன் தலைமையில் நடைபெற்றது.





துணைத் தலைவர் ஆர்.சுப்பிரமணியன் வரவேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் ஏ.விஸ்வேஸ்வரன் பேரவையை துவக்கி வைத்தார். ஆர்.விஜயராகவன் வேலை அறிக்கையினையும், பொருளாளர் சி.சண்முகம் நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்தனர். தோழமை சங்கங்களின் சார்பில் பழ.அன்புமணி, ஆர்.மதியழகன், பி.கண்ணபிரான், டி.செந்தில் வடிவேலன், டி.இதயராஜா, கோ.மூர்த்தி, சி.கலா, எஸ்.கோதண்டபாணி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்டச் செயலாளர் ஏ.ரெங்கசாமி நிறைவுரையாற்றினார். இணைச் செயலாளர் ஆர்.குருசங்கர் நன்றி கூறினார். தலைவராக ஜி.கண்ணன், துணைத் தலைவர்களாக மதுசூதனன், ஆர்.இராஜன், ஏ.குமரேசன், ஆர்.சுப்பிரமணியன், செயலாளராக ஆர்.விஜய ராகவன், இணைச் செயலாளர்களாக டி.செந்தில் வடிவேலன், வி.தசரததேவ், ஆர்.குருசங்கர், பொருளாளராக சி.சண்முகம் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர். ■

# நாகை மாவட்ட நீதிபதியிடம் சங்க நிர்வாகிகள் மனு

**செ**ன்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் தமிழக அரசு சார்பில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் ஜாக்டோ - ஜியோ போராட்டத்தை ஒட்டி நடைபெற்ற வழக்கின் போது அளித்த உறுதிமொழியின்படி புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வது குறித்து அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை 30.11.17-க்குள் பெறப்பட்டு முடிவு எடுக்கப்படாததோடு, குழுவின் அறிக்கைகூட இன்று வரை பெறப்பட வில்லை, குழு அறிக்கை பெறுவதற்கான கால நீட்டிப்பும் செய்யப்படவில்லை என்பது குறித்தும், வழங்கப்பட்ட ஊதிய மாற்றத்திலும் 21 மாத நிலுவைத் தொகை வழங்கப்படாதது குறித்தும், மறைந்த மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தமிழக சட்ட மன்றத்தில் வழங்கிய உறுதிமொழிப்படி தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, ஊட்டச்சத்து ஊழியர்கள், வருவாய் கிராம ஊழியர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரின் நியாயமான கோரிக்கைகள் தீர்க்கப்படவில்லை என்பது குறித்தும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு மாவட்ட நீதிபதிகளின் வழியே மனு கொடுத்து கோரிக்கைகளை நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டுமெனவும், கோரிக்கைகள் நிறைவேறாதபட்சத்தில் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களுக்கு (ஜாக்டோ - ஜியோ ) போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை தெரிவித்து மாநில முடிவின்படி 21.12.17 அன்று மாலை நாகை மாவட்ட நீதிமன்றத்தில் ஜாக்டோ - ஜியோ



மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மனு அளித்தனர்.

மாவட்ட நீதிபதி அவர்கள் பணியாளர்களை தேர்வு செய்திட நேர்முகத் தேர்வில் இருந்ததால் மாவட்ட நீதிமன்ற தலைமை நிர்வாக அலுவலர் எஸ்.ஆறுமுகம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.ட்டீ.அன்பழகனிடமிருந்து மனுவை பெற்றுக் கொண்டார்.

அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், நீதித்துறை ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கே.புகழேந்தி மற்றும் தொழிற்கல்வி சிறப்பாசிரியர்கள் முன்னேற்ற பொது நல சங்கம் சார்பாக மாவட்ட பொறுப்பாளர்கள் முரளி, சந்தானலட்சுமி, பாலமுரளி, மாரியப்பன், ஜெகஜீவன்ராம், காளிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நீதிபதிகளின் வீட்டில் தொடர்ந்து நிகழும் மனித உரிமை மீறல்கள்

மனிதக் கழிவுகளை மனிதர்களைக் கொண்டு அள்ளுவது, மனிதர்களை கொத்தடிமைக் கூலிகளாக நடத்துவது எல்லாம் சட்டப்படி குற்றம் என்று விதிமுறைகளை வகுத்துள்ள நம் நாட்டில்தான், அந்தச் சட்டங்களை மீறும் மனிதர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டிக்கும் நீதிபதிகளின் வீடுகளில் அங்கே பணிபுரியும் அலுவலக உதவியாளர்களை அடிமைகளாக நடத்தும் அவலங்களும் நிகழ்ந்து வருகிறது. தமிழகத்தில் நீதிபதிகளின் வீடுகளில் வீட்டு வேலை செய்ய அலுவலக உதவியாளர்களை பயன்படுத்தும் போக்கு தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், அவர்கள் கொத்தடிமைகளைப் போல் நடத்தப்படுவதும், நீதிபதிகள் சொல்கின்ற வேலைகளை செய்ய அச்சுறுத்தப்படுவதும், அப்படியும் மதிக்காவிட்டால் நீதிபதிக்கு கீழ்படியாமல் நடந்து கொண்டதாக அலுவலக நடவடிக்கை எடுப்பதும், அலுவலக உதவியாளரை தன் காருக்கு டிரைவராக உபயோகப்படுத்துவதும், சொன்ன வேலைகளை செய்யாத அல்லது தவறாக செய்யும் அலுவலக உதவியாளருக்கு சூடு வைப்பதுமான சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகிறது. அவை பத்திரிகைகளில் செய்திகளாக வந்து ஓய்ந்த பிறகும் சம்பந்தப்பட்ட நீதிபதியின் மேல் நடவடிக்கை எடுக்காமல் ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கும் போக்கும்தான் நடந்து வருகிறது.

சென்ற வருடத்தில் ஒரு சம்பவம். பெண் அலுவலக உதவியாளரை ஆண் நீதிபதி தன் உள்ளாடைகளை துவைக்கச் சொன்ன அதிகார வரம்பு மீறலும், அதை செய்ய மறுத்த பெண் அலுவலக உதவியாளரிடம் நீதிபதி சொன்ன வேலையை செய்யவில்லை என்று அலுவலக குறிப்பாணை கொடுத்து அச்சுறுத்திய சம்பவத்தையும், அதன்பேரில் ஊழியர்கள் ஒன்று திரண்டு போராடியும், சம்பந்தப்பட்ட நீதிபதியின் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக குரல் கொடுத்த பெண்மணிக்கு இடமாறுதல் என்ற தண்டனை தான் வழங்கப்பட்டது.

அதேபோல் சிவகங்கையில் ஒரு அலுவலக உதவியாளரை டிரைவராக பணிபுரிய வைத்த நீதிபதியின் செயலால் காப்பீடு செய்யப்படாத நீதிபதியின் காரை ஓட்டி விபத்து நடந்து வண்டி ஓட்டிய அலுவலக உதவியாளர் சம்பவ இடத்திலேயே இறந்ததும், இறந்துபோன அலுவலக உதவியாளரின் மனைவிக்கு கருணை வேலையோ, இழப்பீட்டுத்தொகையோ எதுவும் வழங்காமல் விடப்பட்டதும் சம்பந்தப்பட்ட நீதிபதியின் மீது வாகன காப்பீடு பெறாமல் கார் வைத்திருந்ததற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டதும் நாம் அவ்வப்போது நாம் கண்டுவரும் நிகழ்வுகளே.

அந்த வரிசையில் தற்போது திருச்சியில் சார்பு நீதிபதியின் தாயார் அலுவலக உதவியாளராக வேலை பார்த்த திருமதி நிர்மலாவை வீட்டு வேலை செய்யச் சொல்லி பணித்ததும், அவர் சரியாக சாம்பார் வைக்கவில்லை என்று நீதிபதியின் தாயார் சூடு வைத்ததுமான மனித உரிமை மீறல் நிகழ்ந்துள்ளது. இதற்கு முன்னர் சில ஆண்டுகளுக்கு முன்பாக மீன்குழம்பு வைக்கத் தெரியாது என்று சொன்ன அலுவலக உதவியாளருக்கு மெமோ வழங்கப்பட்டது. இதேபோல குழந்தைகளை பள்ளிக்கு கூட்டிச் செல்ல முடியாது என்று மறுத்த அலுவலக உதவியாளர்கள் தினம் தினம் நீதிபதிகளின் வீட்டில் அடிமை வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். நீதிபதிகள் செய்யும் மனித உரிமை மீறல்களில் சில மட்டுமே வெளி வருகின்றன. ஆனால் பெரும்பாலான மனித உரிமை மீறல்களை அலுவலக உதவியார்கள் தங்கள் வேலைக்கு பாதிப்பு வந்துவிடுமே என்று வெளியே சொல்லமுடியாத நிலையில் அனுபவித்து வருகிறார்கள்.

நீதிபதிகளால் பாதிக்கப்பட்ட அலுவலக உதவியாளர்களை நீதிபதிகள் வீட்டு வேலை வாங்குவதிலிருந்து விலக்கி வைக்கவும், அவர்களை அலுவலக வேலைகளுக்கு மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், அலுவலக உதவியாளர் மீது மனித உரிமை மீறல்களை ஏற்படுத்திய சம்பந்தப்பட்ட நீதிபதி(களின்) மீது குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தியும் **தமிழ்நாடு முழுவதிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் 20.12.2017 அன்று கண்டன ஆர்ப்பாட்டம்** நடத்தினர்.

சென்னை உயர்நீதிமன்றம் இப்பிரச்சனையில் தலையிட்டு நீதிபதிகள் அனைவரும் அலுவலக உதவியாளர்கள் அனைவரையும் சொந்த வேலைகளுக்கு பயன்படுத்தாமல் அலுவலக வேலைகளுக்கு மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்று உத்தரவிடக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. ■

# நீதித்துறை ஊழியர்களுக்கு ஆதரவாக அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி மாவட்ட நீதித்துறையில் அலுவலக உதவியாளராக பணியாற்றும் திருமதி நிர்மலா அவர்கள் திருச்சி குடும்ப நல நீதிமன்றத்தில் மாற்றுப் பணி முறையில் பணியமர்த்தப் பட்டு நீதிபதியின் இல்லப் பணிகளுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளார். இந்த நிலையில் திருச்சி குடும்ப நல நீதிபதி அவர்களின் தாயார், அலுவலக உதவியாளராக வேலை பார்க்கும் திருமதி நிர்மலாவை வீட்டு வேலை செய்யச் சொல்லி பணித்தும், அவர் சாம்பார் வைக்க வேக வைத்த பருப்பு குழைந்தது என்று நீதிபதியின் தாயார் சூடு வைத்த கொடுமையான மனித உரிமை மீறல் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

அலுவலக உதவியாளர்களை நீதிபதிகள் வீட்டு வேலை வாங்குவதிலிருந்து விலக்கு அளித்து அவர்களை அலுவலக வேலைகளுக்கு மட்டுமே பயன்டுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அரசு ஊழியர் சங்கம் சார்பில் 19-12-2017 அன்று தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக...

### காஞ்சிபுரம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 20.12.2017 அன்று மாலை 5.45 மணியளவில் மாவட்ட பொருளாளர் தோழர் பி.இராமமூர்த்தி



தலைமையில் நடைபெற்றது.மாவட்ட இணைச் செயலாளர் தோழர் கே.பூங்குழலி கண்டனவுரை நிகழ்த்தினர். மாவட்ட செயலாளர் தோழர் சா.முகம்மது உசேன் நிறைவுறை நிகழ்த்தி னார்.இறுதியாக மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் வி.விக்டர் சுரேஷ்குமார் நன்றி கூறினார். இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் 16 பெண்கள் உட்பட 59 பேர் பங்கேற்றனர்.

### நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றம் வளாகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார்.

துறைவாரி சங்க நிர்வாகிகள் எஸ்.சித்ரா காந்தி, சொ.கிருஷ்ணமூர்த்தி, சி.வாசுகி, எம்.தமிழ் வாணன், எஸ்.யோகசுந்தரம் ஆகியோர் கண்டன வுரையாற்றினர். நாகை தொழிற்சங்கக் கூட் டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரை யாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் து.இளவரசன் நன்றி கூறினார்.

### வட/தென் சென்னை

20.12.2017 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வடசென்னை மற்றும் தென் சென்னை மாவட்டங்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடசென்னை மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையேற்றார். தென் சென்னை மாவட்டத் தலைவர் டேனியல் ஜெய்சிங், அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவர்கள் கே.எம்.தியாகராஜன், பி.எஸ்.அப்பர் ஆகியோர் கண்டன உரையாற்றினர். குறளகம் பகுதி துணைத் தலைவரும், வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட பொருளாளருமான டேனியல் சத்தியராஜ் நன்றி கூறினார். ■

**இரத்த தானம்**
**மற்றும்**
**உடல் தானம்**
**செய்வோம்!**
**உயிர்களைக்**
**காப்போம்!**
**மரம் வளர்ப்போம்**
**மழை பெறுவோம்!**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம்

சங்கத்தின் சார்பில் திருவள்ளூரில் அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்களுக்கு புதுச்சேரி அரசு வழங்குவது போல இளநிலை உதவி யாளர்களுக்கான ஊதியத்தை வழங்கி காலமுறை



ஊதியத்திற்குள் கொண்டுவர வேண்டும், முறை யான ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்டு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர்.ராணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஆர்.லட்சுமி, மாவட்ட பொருளாளர் உமா ராணி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜி.இளங்கோவன், மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல், அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் டி.டெய்சி சிறப்புரையாற்றினார்.

இதில் துறைவாரி சங்க நிர்வாகிகள் பா.சித்திர செல்வி உட்பட ஏராளமான அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்கள் என ஆயிரத்திற் கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் மாவட்ட துணை தலைவர் ருக்மணி நன்றி கூறினார்.

## தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுனர் சங்கம்

சங்கத்தின் மாநில முடிவின்படி காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும், மூன்றுகட்ட பதவி உயர்வு கூடுதலாக வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 23.12.17 அன்று ஒருநாள் ஒட்டுமொத்த சிறு விடுப்பு போராட்டம் நடைபெறுவதை ஒட்டி



கோரிக்கை விளக்க வாயிற் கூட்டம் இன்று 20.12.17 அன்று நாகை அரசு மருத்துவமனையில் மாவட்டத் தலைவர் அ.விஸ்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் எஸ்.இராமநாத கணேசன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் என்.ஜி.பாஸ்கரன், மருந்து கிடங்கு அலுவலர் டி.செல்லத்தாயி அகியோர் உரையாற்றினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார். செயற்குழு உறுப்பினர் கே.செந்தில்குமார நன்றி கூறினார். பல்வேறு தோழமைச் சங்க தலைவர்கள் பங்கேற்றனர்.

## தமிழ்நாடு கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்கம்

சங்கத்தின் சார்பில் நிலுவையில் உள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை, டிபிஐ வளாகத்தில் பெருந்திரள் முறையீடு ஆர்ப்பாட்டம் கடந்த 12.12.2017 அன்று மாலை எழுச்சியோடு நடைபெற்றது. போராட்டத்திற்கு சங்கத்தன் மாநிலத் தலைவர் அ.சேகர் தலைமையேற்றார். மாநிலச் செயலாளர் சி.ஜே.குறிஞ்சிவேலன் வரவேற்றார். முன்னாள் மாநிலத் தலைவரும், அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவருமான



பி.எஸ்.அப்பர் துவக்கவுரையாற்றினார். பொதுச் செயலாளர் பொன்.ஜெயராம் விளக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க தென் சென்னை மாவட்டத் தலைவர் டேனியல் ஜெய்சிங், வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி, பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் நடராஜன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளரும், கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவருமான சி.ஆர்.இராஜ்குமார் வாழ்த்தி பேசினார். அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரை யாற்றினார். நிறைவாக மாநிலப் பொருளாளர் நா.வினோத்குமார் நன்றி கூறினார். இதில் 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.

### சமூக நலத்துறை பணியாளர் சங்கம்

சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட மாநாடு 23.12.2017 அன்று எல்.ஐ.சி. ஊழியர் சங்கக்



கட்டிடத்தில் சரோஜ் நினைவரங்கத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் இரா.விஜயராகவன் தலைமையேற்றார். எம்.ஏ.மோகன் வரவேற்றார். அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் எஸ்.கோதண்டபாணி துவக்கி வைத்தார். சு.இரவிச்சந்திரன் வேலை அறிக்கையினையும், பா.வெற்றிவேல் நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்தனர். சத்துணவு ஊழியர் சங்கத்தின் இரவி வாழ்த்தி பேசினார். சமூக நலத்துறை பணியாளர் சங்கத்தின் மாநில அமைப்புச் செயலாளர் ஆன்டனி, பொதுச் செயலாளர் க.துரைசிங் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநில செயற்குழு உறுப்பினர் பா.சங்கர் நன்றி கூறினார்.

### அனைத்து மருந்தாளுநர் சங்கம்

சங்கத்தின் போராட்ட விளக்க வாயிற் கூட்டம் 20.12.2017 அன்று மாவட்டத் தலைவர் டி.மணிவண்ணன் தலைமையில்



திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. இதில் அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் வி.சோமசுந்தரம், சத்துணவு ஊழியர் சங்கத்தின் ரவிதாஸ் மற்றும் நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மதியழகன் உள்ளிட்ட தோழமை சங்க, தொழிற்சங்க ஊழியர்கள் பங்கேற்று உரையாற்றினர்.

### தமிழ்நாடு சந்துணவு ஊழியர் சங்கம்

நாகை மாவட்டம், கீழ்வேளூர் ஒன்றியக் கிளை மாநாடு ஒன்றியத் தலைவர் எஸ்.அருளேந்திரன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் ஒன்றியச் செயலாளர் எஸ்.திருஞானசம்மந்தம், முன்னாள் ஒன்றியப் பொருளாளர் ஜி.செல்வராஜ், மாவட்ட மகளிர் துணைக்குழு ஆர்.லல்லி, செயற்குழு உறுப்பினர் டி.நவநீதகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணைத் தலைவர் கே.பாலாம்பாள் வரவேற்புரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் துவக்கவுரையாற்றினார். ■

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com